# 8

# மலைப் பிரசங்கம்

சீஷர்களை உருவாக்கும் ஊழியர் கிறிஸ்து கட்டளையிட்ட எல்லாவற்றுக்கும் கீழ்ப்படியும்படி போதித்து, சீஷராக்குவதில் தான் கொண்டிருக்கும் வாஞ்சையின் காரணமாக இயேசுவானவரின் மலைப் பிரசங்கத்தில் அதிகமான ஆர்வம் கொள்ளுவார். இதைவிட நீளமான இயேசுவானவரின் பிரசங்கம் பதிவுசெய்யப்படவில்லை. இது முழுவது மாக அவருடைய கட்டளைகளைக் கொண்டிருக்கிறது. சீஷர்களை உருவாக்கும் ஊழியர் இந்தப் பிரசங்கத்தில் இயேசு கட்டளையிட்டிருக் கும் எல்லாவற்றுக்கும் கீழ்ப்படிந்து அவைகளைத் தமது சீஷர்களுக்கும் போதிப்பார்.

இது இப்படியிருக்கிறபடியால், மத்தேயு 5–7 அதிகாரங்களிலுள்ள பிரசங்கத்தைக் குறித்து நான் புரிந்துகொண்டிருக்கிறவைகளை உங்களோடு பகிர்ந்துகொள்ளுகிறேன். ஊழியர்கள் தங்கள் சீஷர்களுக்கு மலைப்பிரசங்கத்தை வசனம் வசனமாகப் போதிக்க வேண்டும் என்று நான் ஊக்குவிக்கிறேன். நான் எழுதியிருப்பவை அதற்கு உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

உங்களுக்கு ஒரு பொதுவான பார்வையைக் கொடுப்பதற்காகவும், முக்கிய கருப்பொருள்களை மேம்படுத்திக் காட்டுவதற்காகவும் கீழே மலைப்பிரசங்கத்தின் சுருக்கக் குறிப்பைக் கொடுத்திருக்கிறேன்.

I.) இயேசு தமது பேச்சைக் கேட்பவர்களைக் கூட்டுகிறார் (5:1–2)

II.) முன்னுரை (5:3–20)

- A.) பாக்கியவான்களின் பண்புகள் (5:3–12)
- B.) உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்ற எச்சரிப்பு (5:13–16)
- C.) கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களுக்கும் நியாயப் பிரமாணத்துக்கும் உள்ள தொடர்பு (5:17–20)

III.] பிரசங்கம்: வேதபாரகரையும் பரிசேயரையும்விட அதிக நீதிமான்களாக இருங்கள் [5:21–7:12]

A.] வேதபாரகர் பரிசேயரைப்போலல்லாமல் ஒருவர் மற்றவர் மீது அன்புகாட்டுங்கள் [5:21–26]

B.] வேதபாரகர் பரிசேயரைப் போலல்லாமல் பாலுறவுரீதியாக பரிசுத்தமாக இருங்கள் [5:27–32]

C.] வேதபாரகர், பரிசேயரைப் போலல்லாமல் நேர்மையாக இருங்கள் [5:33–37]

D.] வேதபாரகர், பரிசேயரைப்போல பழிவாங்காதிருங்கள் [5:38–42]

E.] வேதகபாரகர், பரிசேயரைப்போல உங்கள் விரோதிகளை வெறுக்காதிருங்கள் [5:43–48]

F.] வேதபாரகர், பரிசேயரைப்போலல்லாமல் சரியான செயல் நோக்கங்களுக்காக நன்மை செய்யுங்கள் [6:1–18]

1] சரியான நோக்கங்களுக்காக ஏழைகளுக்குக் கொடுங்கள் [6:2–4]

2] சரியான நோக்கங்களுக்காக ஜெபியுங்கள் [6:5–6]

3] ஜெபம் மற்றும் மன்னிப்பைக் குறித்த போதனை [6:7–15]

a] ஜெபத்தைக் குறித்த போதனைகள் [6:7–13]

b] ஒருவர் மற்றவரை மன்னிப்பதின் தேவை [6:8–15]

4] சரியான நோக்கங்களுக்காக உபவாசம் இருங்கள் [6:16–18]

G.] வேதபாரகர், பரிசேயர் செய்வதுபோல பணத்துக்கு ஊழியம் செய்யாதீர்கள் [6:19–34]

H.] உங்கள் சகோதரரோடு சிறிய குற்றங்களைக் கண்டுபிடியாதிருங்கள் [7:1–5]

I.] ஏற்றுக்கொள்ளாதவர்களுக்குச் சத்தியத்தைக் கொடுப்பதின் மூலம் உங்கள் நேரத்தை வீணாக்காதீர்கள் [7:6]

J.] ஜெபிப்பதற்கான ஊக்குவிப்பு [7:7–11]

IV.] முடிவு: பிரசங்கத்தின் சுருக்கம்

A.] சுருக்கிக் கூறும் வாசகம் [7:12]

B.] கீழ்ப்படிய வேண்டிய ஒரு எச்சரிப்பு [7:13–14]

C.] கள்ளத் தீர்க்கதரிசிகளையும் பொய்யான விசுவாசிகளையும் கண்டுகொள்ளுவது எப்படி [7:15–23]





D.] கீழ்ப்படியாமை குறித்த இறுதி எச்சரிப்பும் சுருக்கமும் [7:24–27]

## இயேசு தமது பேச்சைக் கேட்பவர்களைக் கூட்டுகிறார்

> அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அப்பொழுது அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்: [மத். 5:1–2].

இயேசுவானவர் ''திரளான ஜனங்களைக்'' கண்டபிறகு மலையின் மேல் ஏறியதின்மூலம் வேண்டுமென்றே தமது பேச்சைக் கேட்கக் கூடியவர்களின் எண்ணிக்கையைக் குறைத்திருப்பதுபோலத் தோன்றுகிறது. ''அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள்'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது அவருடைய பேச்சைக் கேட்கப் பசிதாகம் கொண்டவர்கள் மட்டுமே சிரமப்பட்டு மலையின்மீது ஏறி, அவர் உட்கார்ந்திருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள் என்பது தெரிகிறது. ஆனாலும் அதிகமான பேர் வந்திருந்தார்கள்; 7:29 வசனத்தில் அவர்கள் ''ஜனங்கள்'' என்று அழைக்கப்படுகிறார்கள்.

இயேசுவானவர் தமது சீஷர்களுக்குத் தமது செய்தியைக் கொடுக்கத் துவங்கினார். துவக்கத்திலிருந்த அவர் எதைக் குறித்துப் பேசப் போகிறார் என்பதற்கான குறிப்பு காணப்படுகிறது. அவர்கள் சில பண்புகளைக் கொண்டிருந்தால் பாக்கியவான்களாக இருப்பார்கள் என்று அவர் சொல்லுகிறார், ஏனென்றால் இந்தப் பண்புகள் பரலோகத்துக்குச் செல்லக் கூடியவர்களுக்கு உரியவையாகும். இதுவே அவருடைய பிரசங்கத்துக்கு ஒட்டுமொத்த கருப்பொருளாக இருக்கிறது – *பரிசுத்தவான்கள் மட்டுமே தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.* 5:3–12 வசனங்களில் கூறப்பட்டிருக்கும் பாக்கியவசனங்கள் இதைக்குறித்து அதிகமாகச் சொல்லுகின்றன.

பாக்கியவான்களுக்குரிய பல்வேறு பண்புகளை இயேசுவானவர் எடுத்துச் சொல்லியிருக்கிறார். அவர்களுக்காகச் சிறப்பான வாக்குத்தத்தங்களை அவர் அருளியிருக்கிறார். சாதாரணமாக வாசிப்பவர்கள் சோதிடக் குறிப்புகளை வாசிப்பதுபோல பாக்கியவசனங்களை வாசிக்கிறார்கள். இவைகளில் ஏதாவது ஒன்று தங்களுக்குப் பொருத்தமாக இருக்கும் என்று தேடுகிறார்கள். கவனமாக வாசிப்பவர்களோ, இயேசுவானவர் வெவ்வேறான ஆசீர்வாதங்களைப் பெறும் வெவ்வேறான மக்களைக்குறித்துக் கூறவில்லை, *ஒரே* எதிர்கால ஆசீர்வாதமாகிய பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும் *ஒரே* வகைப்பட்ட மக்களைக் குறித்தே சொல்லியிருக்கிறார் என்பதை உணருகிறார்கள். இவைகளுக்கு அர்த்தம் காண வேறு வழியில்லை.

ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.

சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.

நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.

இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.

சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.

நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப் படுத்தினார்களே (மத். 5:3–12).

## ஆசீர்வாதங்களும் குணாதிசயங்களும்

முதலாவதாக, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட எல்லா ஆசீர்வாதங்களையும் நாம் பார்ப்போம். பாக்கியவான்கள் 1) பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் 2) ஆறுதலடைவார்கள் 3) பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் 4) திருப்தியடைவார்கள் 5) இரக்கம் பெறுவார்கள். 6) தேவனைத் தரிசிப்பார்கள் 7) தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள் 8) பரலோக ராஜ்யத்தைச் சுந்தரித்துக்கொள்ளுவார்கள் (முதலாவது ஆசீர்வாதம் மறுபடியுமாகச் சொல்லப்பட்டிருக்கிறது).

ஆவியில் எளிமையுள்ளவர்களும், நீதிக்காகத் துன்பப்படுத்தப் பட்டவர்களும் *மட்டுமே* பரலோக ராஜ்யத்தைச் சுதந்திரித்துக்கொள்ளுவார்கள் என்று இயேசுவானவர் சொல்லுகிறாரா? இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் *மட்டுமே* தேவனைத் தரிசிப்பார்களா, சமாதானம்





பண்ணுகிறவர்கள் *மட்டுமே* தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்களா, இவர்களில் எவரும் பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ள *மாட்டார்களா?* சமாதானம்பண்ணுகிறவர்கள் இரக்கத்தைப் பெற *மாட்டார்களா?* இரக்கமுள்ளவர்கள் தேவனுடைய புத்திரர் என்று அழைக்கப்பட*மாட்டார்களா?* இவையெல்லாம் தவறான முடிவுகள் என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே வாக்குத்தத்தம் பண்ணப் பட்டுள்ள இத்தனை ஆசீர்வாதங்களும் ஒரே பெரிய ஆசீர்வாதத்தில் – தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுதல் – வெளியாகும் ஆசீர்வாதங்களே என்பதை நாம் அறிந்துகொள்ளுகிறோம்.

இப்போது இயேசுவானவர் விவரித்த பல குணாதிசயங்களைப் பார்ப்போம்: 1) ஆவியில் எளிமை 2) துயரப்படுதல் 3) சாந்த குணம் 4) நீதியின்மேல் பசிதாகம் கொள்ளுதல் 5) இரக்கம் 6) இருதயத்தில் சுத்தம் 7) சமாதானம்பண்ணுதல் 8) துன்புறுத்தப்படுதல்.

ஒருவர் *இருதயத்தில் சுத்தமுள்ளவராக* இருந்தாலும் *இரக்கமில்லாதவராக* இருக்க முடியும் என்று இயேசுவானவர் சொல்லுகிறாரா? ஒருவர் *நீதிக்காகத் துன்புறுத்தப்பட்டாலும், நீதியின்மேல் பசிதாகம் கொள்ளாமல்* இருக்க முடியுமா? நிச்சயமாக முடியாது. பாக்கியவான்களின் பண்புகள் எல்லாவற்றையும் பாக்கியமுள்ளவர்கள் *எல்லோரும்* ஓரளவுக்காவது பகிர்ந்துகொள்ளுகிறார்கள்.

*பாக்கியவசனங்கள் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களின் குணாதிசயங்களையே எடுத்துச் சொல்லுகின்றன என்பது தெளிவாகும்.* இந்தக் குணாதிசயங்களைத் தமது சீஷர்களுக்கு எடுத்துச் சொல்லுவதின் மூலம் அவர்கள் இரட்சிக்கப்பட்ட பாக்கியவான்கள் என்றும் ஒரு நாள் பரலோகத்தை அனுபவிப்பார்கள் என்றும் இயேசுவானவர் உறுதிப் படுத்துகிறார். தற்போது அவர்கள் பாடுகளின் காரணமாகப் பாக்கியத்தை அனுபவிக்காதவர்களாக இருக்கலாம், உலகம் அவர்களைப் பாக்கியவான்களாகக் கருதாது, ஆனால் தேவன் அவர்களை அப்படியே கருதுகிறார்.

இயேசுவின் இந்த விவரிப்புக்குப் பொருந்திவராதவர்கள் பாக்கியவான்கள் அல்ல, அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டார்கள். சீஷர்களை உருவாக்கும் ஒவ்வொரு ஊழியரும் தனது சபையார் இதை அறிந்திருக்கும்படி செய்ய வேண்டும்.

## பாக்கியவான்களின் பண்புகள்

பாக்கியவசனத்திலுள்ள எட்டு பண்புகளுக்கும் வெவ்வேறான வகைகளில் அர்த்தம்காண வேண்டியிருக்கிறது. எடுத்துக்காட்டாக, ஆவியில் எளிமையாக இருப்பதில் எந்த நற்பண்பு காணப்படுகிறது? ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமானால், அவர் பெற்றிருக்க வேண்டிய பண்பையே இயேசு இங்கே குறிப்பிடுகிறார் என்று நான் நினைக்கிறேன்

– அவர் தனது ஆவிக்குரிய ஏழ்மையை உணர வேண்டும். ஒருவர் தான் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக இரட்சகருக்கான தேவையை உணர வேண்டும். இயேசுவின் பேச்சைக் கேட்டவர்களின் மத்தியில் அப்போது தான் தங்கள் பரிதாபகரமான நிலையை உணர்ந்தவர்களும் இருந்தார்கள். தங்கள் பாவங்களைக் குறித்து உணராது பெருமைகொண்டிருக்கிறவர்களைவிட இவர்கள் பாக்கியமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

முதல் குணாதிசயம் இரட்சிப்பைச் சம்பாதிப்பது குறித்த சிந்தனையையும், சுய நிறைவையும் ஒன்றுமில்லாததாக ஆக்கிவிடுகிறது. தன்னால் தேவனுக்குக் கொடுக்க ஒன்றுமில்லை, தனது சொந்த நீதி ''அழுக்கான கந்தைபோல'' இருக்கிறது என்பதை உணர்ந்தவனே மெய்யாகவே பாக்கியமுள்ளவனானவான் [ஏசாயா 64:6].

எவரும் தனது சொந்த முயற்சியினால் பாக்கியமுள்ளவர்களுக்குரிய பண்புகளைப் பெற முடியும் என்று நினைப்பதை இயேசுவானவர் விரும்பவில்லை. மக்கள் பாக்கியமுள்ளவர்களாக இருக்கிறார்கள், அதாவது அவர்கள் பாக்கியமுள்ளவர்களுக்குரிய பண்புகளைப் பெற்றிருப்பார்களானால், *தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக* இருக்கிறார்கள். இது எல்லாமே தேவனுடைய கிருபையிலிருந்து வருகிறது. இயேசுவானவர் குறிப்பிடும் பாக்கியமுள்ளவர்கள் அவர்கள் பரலோகத்தைச் சுதந்தரித்துக்கொள்ளப் போவதற்காக மட்டுமே பாக்கியமுள்ளவர்களாக இருக்கவில்லை, இந்த உலகத்தில் தேவன் அவர்களுடைய வாழ்க்கையில் செய்யும் கிரியைகளுக்காகவும் பாக்கியமுள்ளவர்களாக இருக்கிறார்கள். என் வாழ்க்கையில் பாக்கியவான்களின் பண்புகளை நான் பார்க்கும்போது, அது நான் செய்திருப்பதை அல்ல, தேவன் தமது கிருபையினால் என்னில் செய்திருப்பதையே அது நினைவுபடுத்த வேண்டும்.

## துயரப்படுகிறவர்கள்

பரலோகத்துக்குச் செல்லுபவர்களுக்குத் தேவையான முதல் பண்பே முதலாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது பண்பும் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறபடியால் இரண்டாவது இடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது: ''துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்'' [மத். 5:4]. முழு இருதயத்தினாலும் உணரப்படும் மனந்திரும்புதலையும், துக்கத்தையும் இயேசுவானவர் குறிப்பிட்டிருக்கிறாரோ? நான் அப்படித்தான் நினைக்கிறேன். ஏனென்றால், தேவனுக்கேற்ற துக்கம் இரட்சிப்புக்கேற்ற மனந்திரும்புதலை உண்டாக்குகிறது [பார்க்க, 2 கொரி. 7:9]. இயேசுவானவர் ஒரு உவமையில் குறிப்பிட்ட துயரமுள்ள ஆயக்காரன் ஆலயத்தில் தாழ்மையோடு தன் தலையைத் தாழ்த்தி, தன் மார்பில் அடித்துக்கொண்டு தேவனுடைய இரக்கத்துக்காகக் கதறினான். இவன் நிச்சயமாக பாக்கியவானாக இருக்கிறான். ஆலயத்தில் ஜெபம்செய்த





பெருமையுள்ள பரிசேயனைப்போல இராமல், இந்த ஆயக்காரன் தனது பாவங்கள் மன்னிக்கப்பட்டவனாக, நீதிமானாக்கப்பட்டவனாகத் திரும்பிப் போனான் [பார்க்க, லூக்கா 18:9–14]. இயேசுவானவரின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களின் மத்தியில், பரிசுத்த ஆவியானவரால் தங்கள் பாவத்தைக் குறித்து உணர்த்தப்பட்டவர்கள் இருந்திருக்க வேண்டும் என்றே நான் நினைக்கிறேன். விரைவில் அவர்கள் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து ஆறுதலைப் பெறுவார்கள்.

இயேசுவானவர் கிறிஸ்துவிடம் முதன்முதலாக வரும் ஒருவர் கொண்டிருக்கும் துக்கத்தைக் குறித்துக் குறிப்பிட்டிராவிட்டால், அவர் எல்லா விசுவாசிகளும் தங்களை நேசிக்கும் தேவனுக்கு விரோதமாக முழு உலகமும் எதிர்த்து நிற்பதைக் கண்டு அனுபவிக்கும் துயரத்தைக் குறிப்பிட்டிருக்கலாம். பவுல் இதை ''மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும்'' என்று குறிப்பிட்டிருக்கிறார் [ரோமர் 9:1].

## சாந்தகுணமுள்ளவர்கள்

மூன்றாவது பண்பாகிய சாந்தகுணம் ஆவியின் கனியில் ஒன்றாகப் பட்டியலிடப்பட்டுள்ளது [பார்க்க, கலா. 5:22–23]. சாந்தகுணம் என்பது தானாக உருவாக்கிக்கொள்ளும் ஒரு பண்பு அல்ல. தேவனுடைய கிருபையைப் பெற்றவர்களும், பரிசுத்த ஆவியானர் தங்கியிருப்பவர்களும் சாந்தகுணத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்கள். கடுமையாக நடந்துகொள்ளும் ''கிறிஸ்தவர்கள்'' எச்சரிப்போடு இருக்க வேண்டும். அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுபவர்களில் ஒருவராக இருக்க மாட்டார்கள்.

## நீதிக்காகப் பசிதாகமுள்ளவர்கள்

நீதிக்காகப் பசிதாகம் கொள்ளுதல் நான்காவது பண்பாகும். இது மறுபடியும் பிறந்த ஒவ்வொருவருக்கும் தேவனால் உள்ளுக்குள் கொடுக்கப்பட்ட வாஞ்சையைக் குறிப்பிடுகிறது. உலகத்திலும் தன்னிலுமுள்ள அநீதியைக் குறித்து அவர் துக்கப்படுகிறார். அவர் பாவத்தை வெறுத்து [பார்க்க, சங். 97:10; 119:128, 163] நீதியை நேசிக்கிறார்.

நாம் வேதாகமத்தில் *நீதி* என்ற சொல்லை வாசிக்கும்போதெல்லாம், அது கிறிஸ்துவால் நமது கணக்கில் வைக்கப்பட்ட சட்டபூர்வமான நீதி என்று நினைத்துக்கொள்ளுகிறோம். ஆனால் இந்தச் சொல் எப்போதுமே அதே அர்த்தத்தைக் குறிப்பிட வேண்டும் என்ற அவசியமில்லை. ''தேவனுடைய தகுதிநிலையின்படி சரியாக வாழுதல்'' என்ற அர்த்தத்தையும் அது குறிப்பிடுகிறது. இதுவே இங்கே இயேசுவானவர் நோக்கம் கொண்டிருக்கும் அர்த்தமாக இருக்க வேண்டும். ஏனென்றால், ஒரு கிறிஸ்தவன் ஏற்கெனவே தன்னிடமிருக்கும் ஒன்றுக்காகப் பசிதாகம் கொள்ள வேண்டிய அவசியமில்லையே? ஆவியினாலே பிறந்த

எல்லோரும் நீதியோடு *வாழ* வேண்டுமென்று பசிதாகம் கொள்ளுகிறார்கள், அவர்கள் ஒருநாள் ''திருப்தியடைவார்கள்'' என்ற வாக்குத்தத்தம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது [மத். 5:6]. தேவன் தமது கிருபையினால் அவர்களில் துவங்கிய கிரியையைச் செய்து முடிப்பார் என்பது நிச்சயமாகும் [பார்க்க, பிலி. 1:6].

இங்கே இயேசுவின் வார்த்தைகள் வரவிருக்கும் புதிய பூமியைச் சுட்டிக்காட்டுகின்றன. அங்கே ''நீதி வாசமாயிருக்கும்'' [2 பேதுரு 3:13]. அப்போது பாவமே இருக்காது. எல்லோருமே தேவனிடத்தில் தங்கள் முழு இருதயத்தோடும் அன்புகூருவார்கள், தங்களைப் போலத் தங்கள் அயலாரிடத்திலும் அன்புகூருவார்கள். இப்போது நீதிக்காகப் பசிதாகம்கொள்ளும் நாம் அப்போது திருப்தியடைவோம். நாம் முழு இருதயத்தோடும் ஏறெடுக்கும் ஜெபம் இறுதியில் நிறைவேறும்: ''உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக'' [மத். 6:10].

### இரக்கமுள்ளவர்கள்

மறுபடியும் பிறந்த ஒவ்வொருவருக்குள்ளும் இரக்கமுள்ள தேவன் வாசம்பண்ணுகிறபடியால் இந்த ஐந்தாவது பண்பாகிய இரக்கத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இரக்கமில்லாதவர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதில்லை, தாங்கள் அவருடைய கிருபையில் பங்கேற்கவில்லை என்பதை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். அப்போஸ்தலனாகிய யாக்கோபு இப்படிச் சொல்லுகிறார்: ''இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்'' [யாக். 2:13]. ஒருவன் தேவனுக்கு முன்பாக நின்று இரக்கமில்லாத நியாயத்தீர்ப்பைப் பெற்றான் என்றால், அவன் நரகத்துக்குப் போவானா அல்லது பரலோகத்துக்குப் போவானா? [32] பதிலை நாம் அறிந்திருக்கிறோம்.

இயேசுவானவர் ஒருமுறை தான் தனது எஜமானிடமிருந்து அதிகமான இரக்கத்தைப் பெற்றபிறகும், சக வேலைக்காரனிடம் இரக்கம் காட்டாத ஒருவனைக் குறித்த உவமைக்கதையைச் சொல்லியிருக்கிறார். என்ன நடந்தது என்பதை அவனுடைய எஜமான் கேள்விப்பட்டபோது, ''அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான்'' [மத். 18:34]. இரக்கமில்லாத மக்கள் தேவனிட

[32] சுவாரசியமான காரியம் என்னவென்றால் யாக்கோபின் புத்தகத்தில் அடுத்த வசனம் இப்படிச் சொல்லுகிறது: ''என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?'' [யாக். 2:14].





மிருந்து இரக்கத்தைப் பெற மாட்டார்கள். அவர்கள் பாக்கியவான்களின் பட்டியலில் இல்லை.

### இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்

இருதயத்தில் சுத்தமே பரலோகத்துக்குச் செல்லுபவர்களுடைய ஆறாவது பண்பாகும். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பலரைப்போலக் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் வெளியில் மட்டும் பரிசுத்தமுள்ளவர்களாகத் தோற்றமளிக்கவில்லை. தேவனுடைய கிருபையினால் அவர்களுடைய இருதயமும் சுத்தமாக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் தேவனிடத்தில் அன்புகூருகிறார்கள். அது அவர்களுடைய தியானங்களிலும் செயல் நோக்கங்களிலும் தாக்கம் விளைவிக்கிறது. அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் என்று இயேசு வாக்குத்தத்தம் அருளியிருக்கிறார்.

இருதயத்தில் *சுத்தமில்லாமலும்* அதனால் தேவனைத் தரிசிக்க *முடியாமலும்* இருக்கும் மெய்யான கிறிஸ்தவர்கள் உண்டா? தேவன் அவர்களிடம் ''நீங்கள் பரலோகத்துக்கு வரலாம், ஆனால் என்னைத் தரிசிக்க முடியாது என்று சொல்லுவாரா?'' இல்லை, பரலோகத்துக்குச் செல்லக் கூடிய *ஒவ்வொரு* மெய்யான விசுவாசியும் சுத்தமான இருதயத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

### சமாதானம்பண்ணுகிறவர்கள்

அடுத்தபடியாகச் சமாதானம்பண்ணுகிறவர்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். கிறிஸ்துவை மெய்யாகப் பின்பற்றுகிறவர்களைக் குறித்தே இயேசு சொல்லுகிறார் என்பது மறுபடியுமாகத் தெளிவாகிறது. ஏனென்றால் கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களே தேவனுடைய குமாரர்களாகிறார்கள் [பார்க்க, கலா. 3:26].

ஆவியினாலே பிறந்தவர்கள் குறைந்தபட்சம் மூன்று வழிகளில் சமாதானம்பண்ணுகிறவர்களாக இருக்கிறார்கள்.

முதலாவதாக, தாங்கள் முன்பு எதிரியாக நினைத்த தேவனோடு இப்போது சமாதானமாகியிருக்கிறார்கள் [பார்க்க, ரோமர் 5:10].

இரண்டாவதாக, கூடுமானவரையில் அவர்கள் எல்லாரோடும் சமாதானமாக இருக்கிறார்கள். பிரிவினையும் பிணக்கும் அவர்களுடைய பண்பு அல்ல. பவுல் ''பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள்'' இவைகளைச் செயல்படுத்துபவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை என்று சொல்லியிருக்கிறார் [பார்க்க, கலா. 5:19–21]. மெய்யான விசுவாசிகள் ஒரு சண்டையைத் தவிர்க்கவும், தங்கள் உறவுகளில் சமாதானத்தைக் காத்துக்கொள்ளவும் கூடுதலாக ஒரு மைல்

நடக்கவும் தயாராக இருப்பார்கள். அவர்கள் சகோதரனோடு சண்டை போட்டுக்கொண்டு தேவனோடு சமாதானமாக இருப்பதாகச் சொல்லு வதில்லை (பார்க்க, மத். 5:23–24; 1 யோவான் 4:20).

மூன்றாவதாக, சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளுவதின்மூலம் கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றுகிறவர்கள், மற்றவர்கள் தேவனோடும் சக மனிதரோடும் சமாதானம்பண்ணுவதற்கு உதவவும் முடியும். அநேகமாக இந்தப் பகுதியைக் கருத்தில்கொண்டே யாக்கோபு இப்படி எழுதிருக்க வேண்டும்: ''நீதியான கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது'' (யாக். 3:18).

## துன்பப்படுகிறவர்கள்

இறுதியாக, நீதிக்காகத் துன்பப்படுகிறவர்களை இயேசுவானவர் *பாக்கியவான்கள்* என்று அழைக்கிறார். கிறிஸ்துவின் நீதி தங்கள் கணக்கில் வைக்கப்பட்டிருப்பதாக *நினைத்துக்*கொள்ளுபவர்களை அல்ல, அவர் நீதியாக *வாழும்* மக்களைக் குறிப்படுகிறார். கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களையே அவிசுவாசிகள் துன்புறுத்து கிறார்கள். கீழ்ப்படிகிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்.

எப்படிப்பட்ட துன்புறுத்தலைக் குறித்து இயேசுவானவர் பேசுகிறார்? சித்திரவதை செய்யப்படுதலா? இரத்தச்சாட்சியாக மரித்தலா? இல்லை, தமக்காக இழிவாகப் பேசப்படுபவர்களை அவர் குறிப்பிடுகிறார். ஒருவர் மெய்யான கிறிஸ்தவர் என்பது அவிசுவாசி களுக்குத் தெளிவாகத் தெரிகிறது என்பதை இது மறுபடியுமாகச் சுட்டிக்காட்டுகிறது. இல்லாவிட்டால் அவிசுவாசிகள் இவர்களைக் குறித்து இழிவான காரியங்களைச் சொல்ல மாட்டார்களே? கிறிஸ்தவர் கள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளுபவர்களில் எத்தனை பேரை அவிசுவாசிகள் இனம்கண்டுகொண்டு அவர்களுக்கு விரோதமாகப் பேசியிருக்கிறார்கள்? அவர்கள் உண்மையில் மெய்யான கிறிஸ்தவர் களே இல்லை. இயேசுவானர் ''எல்லா மனுஷரும் உங்களைக் குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்'' என்று சொல்லியிருக்கிறார் (லூக்கா 6:26). உலகம் மெய்யான கிறிஸ்தவர்களை வெறுக்கிறது (மேலும் பார்க்க, யோவான் 15:18–21; கலா. 4:29; 2 தீமோ. 3:12; 1 யோவான் 3:13–14).

## உப்பும் வெளிச்சமும்

இயேசுவானவர் தமக்குக் கீழ்ப்படிதலுள்ள சீஷர்களிடம் அவர்கள் பரலோகத்தைச் சுதந்தரிக்கப் போகிறார்கள் என்று கூறியபிறகு, ஒரு





எச்சரிப்பின் வாக்கியத்தைக் கொடுத்தார். ஆவிக்குரிய பிரகாரமாக வெள்ளாடுகளாக இருப்பவர்களிடம் அவர்கள் தங்களிடம் இருப்பதாகச் சொல்லும் இரட்சிப்பை ஒருபோதும் இழந்துபோவதில்லை என்று உறுதிப்படுத்தும் நவீன காலப் போதகர்களைப்போலல்லாமல், இயேசுவானவர் தமது சீஷர்களை நேசித்தபடியால், அவர்கள் பாக்கியவான்களின் பட்டியலிலிருந்து விலக்கப்படவும் கூடும் என்பதை எச்சரித்தார்.

> நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப் படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத் திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது (மத். 5:13–15).

இயேசுவானவர் தமது சீஷர்களிடம் அவர்கள் உப்பாகவும் வெளிச்சமாகவும் ஆக *வேண்டும்* என்று சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். அவர்கள் ஏற்கெனவே உப்பாக (உருவகரீதியாக) *இருந்தார்கள்*. அவர்கள் *சாரத்தோடு* இருக்க வேண்டும் என்றே அவர் எச்சரித்தார். அவர்கள் ஏற்கெனவே வெளிச்சமாக (உருவகரீதியாக) *இருந்தார்கள்*. அவர்கள் தங்கள் வெளிச்சத்தை மறைத்து வைக்காமல் *தொடர்ந்து* பிரகாசிக்க வேண்டும் என்று அவர் எச்சரித்தார். ''கிறிஸ்தவர்களுக்கு'' அவர்கள் உப்பாகவும், வெளிச்சமாகவும் ஆக வேண்டும் என்று போதிக்கப்படும் எண்ணற்ற பிரசங்கங்களைவிட இது வேறுபட்டதாக இருக்கிறதல்லவா? மக்கள் ஏற்கெனவே உப்பாகவும் வெளிச்சமாகவும் இராவிட்டால் அவர்கள் இயேசுவின் சீஷர்களாக இல்லை. அவர்கள் பாக்கியவான்களின் கூட்டத்தில் இல்லை, அவர்கள் பரலோகத்துக்குச் செல்லப் போவதில்லை.

இயேசுவானவரின் நாட்களில் உப்பானது அடிப்படையில் மாமிசத்தைப் பாதுகாத்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. கிறிஸ்துவைக் கீழ்ப்படிதலுடன் பின்பற்றும் நாம் இந்த மோசமான உலகம் முழுமையாக மோசமாகிவிடாதபடி காத்துக்கொள்ளக் கூடிய வர்களாக இருக்கிறோம். ஆனால் நாம் நமது நடத்தையில் உலகத்

தாரைப்போல ஆவோமானால், மெய்யாகவே ''ஒன்றுக்கும் உதவாதவர்களாக'' இருப்போம் [வச. 13]. பாக்கியவான்கள் தங்கள் தனிச்சிறப்பான குணாதிசயங்களைக் காத்துக்கொண்டு சாரத்தோடு இருக்க வேண்டும் என்று இயேசு எச்சரித்தார். அவர்கள் சாரமிழந்துபோய் ''வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்கும்'' மட்டுமே தகுதியுள்ளவர்களாக ஆகாதபடி, உலகத்தைவிட்டுத் தங்களைத் தனிவேறுபட்டவர்களாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். புதிய ஏற்பாட்டில் மெய்யான விசுவாசிகள் பின்வாங்கிப் போகக்கூடாது என்பதற்காக நேரடியாகக் கொடுக்கப்பட்டுள்ள எச்சரிப்புகளில் இதுவும் ஒன்றாகும். உப்பானது மெய்யாகவே உப்பாக இருக்குமானால் அது சாரமுள்ளதாக இருக்கும். இதைப்போலவே இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் அவருடைய சீஷர்களாகச் செயல்பட வேண்டும். இல்லாவிட்டால் முன்பு அவர்கள் சீஷர்களாக இருந்தாலும் இப்போது அவரைப் பின்பற்றுகிறவர்களாக இருக்க மாட்டார்கள்.

கிறிஸ்துவை மெய்யாகப் பின்பற்றுகிறவர்கள் உலகத்துக்கு வெளிச்சமாகவும் இருக்கிறார்கள். வெளிச்சம் *எப்போதுமே* பிரகாசிக்கிறது. அது ஒளி கொடுக்காவிட்டால் அது வெளிச்சமே கிடையாது. இந்த ஒப்புவமையில் வெளிச்சம் நமது நற்கிரியைகளைக் குறிக்கிறது [பார்க்க, மத். 5:16]. எந்த நற்கிரியைகளையும் செய்யக்கூடாதவர்களிடம் இயேசு இதைச் சொல்லவில்லை, நற்கிரியையைச் செய்கிறவர்கள் தங்கள் நன்மையை மற்றவர்களிடமிருந்து மறைத்து வைக்க வேண்டாம் என்றே அவர் சொல்லுகிறார். அவர்களுடைய நற்கிரியைகளுக்கு அவர்களில் கிரியைசெய்யும் தேவனே ஆதாரமானவராக இருக்கிறபடியால், அவர்கள் தங்கள் நற்கிரியைகளை மறைக்காமல் இருப்பார்களானால் தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். இங்கே தேவனுடைய கிருபையான கிரியைக்கும் நாம் அவரோடு ஒத்துழைப்பதற்கும் இடையிலுள்ள அருமையான சமநிலையை இது காட்டுகிறது. பரிசுத்தமாக இருக்க வேண்டுமானால் இவையிரண்டும் அத்தியாவசியமானவையாகும்.

## கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களோடு நியாயப்பிரமாணத்தின் தொடர்பு

இப்போது நாம் மிகவும் முக்கியமானதொரு பகுதிக்கு வருகிறோம். இயேசுவானவர் தமது பிரசங்கத்தின் எஞ்சிய பகுதியில் அதிகமாகக் கூறப்போகிறவைகளுக்கு இது முன்னுரையாக இருக்கிறது:

> நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான். வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் [மத். 5:17–20].





''நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்'' என்று இயேசுவானவர் கூறுகிறபடியால் கூட்டத்தில் ஒருசிலராவது அப்படிப்பட்ட எண்ணத்தைக் கொண்டிருந்தார்கள் என்பது தெளிவாகிறது. அவர்கள் ஏன் அப்படி நினைத்தார்கள் என்பதை நம்மால் யூகிக்கவே முடிகிறது. *ஒருவேளை* இயேசுவானவர் பிரமாணவாதிகளாகிய வேதபாரகரையும், பரிசேயரையும் கடிந்துகொள்ளுகிறபடியால், அவர் நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் அழிப்பதற்காக வந்திருக்கிறார் என்று அவர்கள் நினைத்திருக்கலாம்.

என்றாலும், இப்படிப்பட்ட யூகம் தவறானது என்று இயேசு தமது சீஷர்களை எச்சரித்தார். அவரே பழைய ஏற்பாடு முழுவதற்கும் தெய்வீகமாகத் தூண்டுதலளித்தவர். எனவே அவர் மோசே மற்றும் தீர்க்கதரிசிகளின் மூலமாகத் தாம் கூறியதை அழித்துப்போடப் போவதில்லை. தாம் நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் *நிறைவேற்றவே* வந்ததாக அவர் சொன்னார்.

அவர் நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் எப்படி நிறைவேற்றுவார்? இயேசுவானவர் மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்களை மட்டும் குறிப்பிடுகிறார் என்று சிலர் நினைக்கிறார்கள். இயேசுவானவர் மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினாலும் [இனிமேல் நிறைவேற்றப் போனாலும்] அவர் அதைக் கருத்தில் கொண்டிருக்கவில்லை. பின்னணியைப் பார்க்கும்போது, அவர் நியாயப்பிரமாணத்தில் ''ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் '' அழிந்துபோகாமல் அதை முழுமையாக நிறைவேற்றுவார் [வச. 18]. மேலும், கட்டளைகளில் ''சிறிதான தொன்றையாகிலும்'' விட்டுவிடாதிருப்பார் [வச. 19].

இயேசுவானவர் தமது கீழ்ப்படிதலுள்ள வாழ்க்கை மற்றும் பலி மரணத்தின் மூலமாக (பார்க்க, ரோமர் 8:4) நமது சார்பாக நியாயப் பிரமாணத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவார் என்று மற்றவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் பின்னணியைப் பார்க்கும்போது, அவர் இதைக் கருத்தில் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. கீழே வரும் வசனங்களில், நியாயப்பிரமாணத்தைத் தமது வாழ்க்கை மற்றும் மரணத்தின் மூலமாக நிறைவேற்றுவதைக் குறித்து இயேசுவானவர் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அடுத்த வாக்கியத்தில் ''வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும்'' நியாயப்பிரமாணத்திலுள்ளவைகள் பொருத்தமான வையாக இருக்கும் என்று அவர் சொல்லியிருக்கிறார்; இவை அவருடைய சிலுவை மரணத்துக்கு அப்பாற்பட்டுப் பின்வரும் ஒருகால கட்டத்தைக் குறிக்கின்றன. பிறகு நியாயப்பிரமாணத்தைக் குறித்த மக்களின் மனோபாவம் பரலோகத்தில் அவர்களுடைய இடத்தையும் பாதிக்கும் என்றும் (வச. 19), மக்கள் வேதபாரகரையும் பரிசேயரையும்விட அதிகமாக நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாவிட்டால் அவர்கள் பரலோகத்துக்குள் பிரவேசிக்க முடியாது என்றும் (வச. 20) அவர் சொல்லியிருக்கிறார்.

மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்களையும், நமது சார்பாக நியாயப்பிரமாணத்தின் தேவைகளைத் தாமே நிறைவேற்றுவதோடும்கூட இயேசுவானவர் மக்களும் நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளுக்குக் *கீழ்ப்படிய வேண்டும்* என்றும், தீர்க்கதரிசிகள் கூறியவைகளைச் *செய்ய வேண்டும்* என்றும் எதிர்பார்த்தார். ஒருவகையில், நியாயப்பிரமாணத் தைக்குறித்த தேவனுடைய ஆதி நோக்கத்தை வெளிப்படுத்துவதின் மூலமாகவும், அதை முழுமையாக ஆதரித்து விளக்கம் கொடுப்பதின் மூலமாகவும், அதைக்குறித்து மக்களின் அறிவில் குறைவுபடுவதை நிறைவுசெய்வதின் மூலமாகவும் இயேசுவானவர் அதை நிறைவேற்று வார்.[33] 17ஆம் வசனத்தில் *நிறைவேற்றுகிற* என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள கிரேக்கச் சொல் புதிய ஏற்பாட்டில் *முடித்தல், முழுமையாகச் செய்து முடித்தல், நிறைவுசெய்தல்* ஆகிய அர்த்தங்களையும் கொண்டிருக்கிறது. நான்கு வசனங்களுக்குப் பிறகு இயேசுவானவர் இதைத்தான் செய்யத் துவங்கினார்.

இயேசுவானவர் நியாயப்பிரமாணத்தையும், தீர்க்கதரிசனங் களையும் அழிக்கிறதற்கு வரவில்லை, அவைகளை நிறைவேற்றவே, அதாவது ''முழுவதுமாக நிரப்பவே'' வந்தார். மலைப்பிரசங்கத்தின் இந்தப் பகுதியை நான் போதிக்கும்போது, நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசனங்களிலும் தேவன் வெளிப்படுத்தியிருப்பதைக் குறிக்கப் பாதித் தண்ணீர் நிரம்பியிருக்கும் ஒரு கண்ணாடிக் குவளையைக் காட்டுவேன். இயேசுவானவர் நியாயப்பிரமாணத்தையும், தீர்க்கதரிசனங் களையும் அழிக்கிறதற்கு வரவில்லை (இதை நான் சொல்லும்போது, அந்த அரை டம்ளர் நீரைக் கொட்டுவதுபோலப் பாவனை செய்வேன்). அவர் நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்று வார் என்று சொல்லும்போது, ஒரு பாட்டில் நீரை எடுத்து அந்தக் குவளையில் ஊற்றி அதை நிரப்புவேன். இயேசுவானவர் சொன்னதின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள இது உதவியாக இருக்கும்.

## நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதின் முக்கியத்துவம்

நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசனங்களிலும் காணப்படும் கட்டளைகளைப் பற்றிய தமது கருத்தை இயேசுவானவர் வலுவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். தமது சீஷர்கள் அவைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். அவை எப்போதையும் போலவே முக்கியமானவையாக இருக்கின்றன. உண்மையில், அவர்கள் எப்படி இந்தக் கற்பனைகளை மதிப்பார்களோ அப்படியாகப் பரலோகத் தில் அவர்கள் மதிக்கப்படுவார்கள்: ''ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோக ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிற வனோ, பரலோக ராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்'' (5:19).

பிறகு நாம் இருபதாம் வசனத்துக்கு வருகிறோம்: ''வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிரா

[33] ''நியாயப்பிரமாணத்தின் சடங்காச்சார அம்சங்கள்'' மற்றும் ''நியாப்பிரமாணத்தின் நன்னெறி அம்சங்கள்'' இவைகளைப் பொருத்தவரை யில் இது உண்மையாக இருக்கிறது. ஆனால் சடங்காச்சாரப் பிரமாணங்களைக் குறித்த அவருடைய முழுமையான விளக்கம் பரிசுத்த ஆவியானவரால் பின்னால் அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்படவிருந்தது. இயேசுவானவரே தேவ ஆட்டுக்குட்டியானவராக இருக்கிறபடியால், நாம் இனிமேலும் ஏன் பலியிட அவசியமில்லை என்பதை இப்போது புரிந்துகொள்ளுகிறோம். எல்லா உணவும் சுத்தமானவை என்று இயேசுவானவர் அறிவித்திருக்கிறபடியால், நாம் உணவு சம்பந்தமான பழைய ஏற்பாட்டு விதிகளைப் பின்பற்றுவதில்லை (பார்க்க, மாற்கு 7:19). இயேசுவானவர் இப்போது நமது பிரதான ஆசாரியனாக இருக்கிறபடியால் உலகத்தில் நமக்காகப் பரிந்துபேச ஒரு ஆசாரியன் தேவையில்லை போன்ற பல காரியங்களை நாம் இந்த விளக்கங்களிலிருந்து அறிந்துகொண்டிருக்கிறோம். ஆனால் சடங்காச்சார பிரமாணங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளதுபோல, நன்னெறிப் பிரமாணங்களில் இயேசுவானவர் சொன்ன அல்லது செய்ததின்மூலம் அவருடைய மரணத்துக்கு முன்போ அல்லது உயிர்த்தெழுதலுக்குப் பின்போ எந்த மாற்றமும் உண்டாக்கப்படவில்லை. மாறாக, இயேசுவானவர் தேவனுடைய நன்னெறிப் பிரமாணங்களை ஏற்றுக்கொண்டு, அவைகளுக்கு விளக்கம் கொடுத்தார். அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, ஆவியானவரின் ஏவுதலின் மூலமாக அப்போஸ்தலரும் அப்படியே விளக்கம் கொடுத்தார்கள்.

விட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.''

இது ஒரு புதிய சிந்தனை அல்ல, முந்தைய வசனங்களோடு தொடர்புடைய இறுதி வாசகம் என்பதைக் கவனியுங்கள். கட்டளைகளைக் கைக்கொள்ளுவது எவ்வளவு முக்கியமானது? *ஒருவர் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமானால், வேதபாரகரையும் பரிசேயரையும் விட அதை அதிகமாகக் கைக்கொள்ள வேண்டும். பரிசுத்தமுள்ளவர்கள் மட்டுமே தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்* என்ற தமது கருப்பொருளை இயேசுவானவர் தொடர்ந்து வலியுறுத்துவதைக் கவனியுங்கள்.

கிறிஸ்துவுக்கு முரண்பாடாக இராத வகையில், சீஷர்களை உருவாக்கும் ஊழியர் யாருடைய நீதி வேதபாரகர், பரிசேயரின் நீதியை விடவும் அதிகமாக இல்லாதிருக்கிறதோ அவர்களுக்கு இரட்சிப்பின் நிச்சயத்தைக் கொடுக்க மாட்டார்.

## எப்படிப்பட்ட நீதியைக் குறித்து இயேசுவானவர் பேசுகிறார்?

நமது நீதி வேதபாரகர் பரிசேயரின் நீதியைவிடவும் அதிகமாக இருக்க வேண்டும் என்று இயேசுவானவர் கூறியபோது, அவர் நமது கணக்கில் இலவச ஈவாக வைக்கும் சட்டபூர்வமான நீதியைக் குறிப்பிடுகிறாரா? இல்லை. நல்லதொரு காரணத்துக்காக அவர் அப்படிச் செய்யவில்லை. முதலாவதாக, பின்னணி இந்த அர்த்தத்துக்குப் பொருந்திவரவில்லை. இந்த வசனத்துக்கு முன்னும் பின்னும் [மலைப் பிரசங்கம் முழுவதிலும்] இயேசுவானவர் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதைக் குறித்தே, அதாவது, நீதியாக வாழ்வதைக் குறித்தே சொல்லிக் கொண்டிருக்கிறார். அவருடைய வார்த்தைகளுக்கு இயல்பான அர்த்தம் நாம் வேதபாரகரையும் பரிசேயரையும்விட அதிக நீதியுள்ளவர்களாக *வாழ* வேண்டும் என்பதாகும். இயேசுவானவர் வேதபாரகரிடமிருந்தும், பரிசேயரிடமிருந்தும் ஒரு தகுதிநிலையை எதிர்பார்க்கும்போது, அவர் தமது சீஷர்களிடம் அப்படி எதிர்பார்க்க மாட்டார் என்று சொல்லுவது எவ்வளவு அபத்தமான காரியம்! வேதபாரகரும் பரிசேயரும் செய்த பாவங்களுக்காக இயேசுவானவர் அவர்களைக் குற்றந்தீர்க்கும்போது, தமது சீஷர்கள் அந்தப் பாவங்கலைச் செய்யும்போது, அவர்கள் வெறுமனே ஒரு ''இரட்சிப்பின் ஜெபத்தை ஏறெடுத்திருக்கிறபடியால், அவர் அவர்களைக் குற்றந்தீர்க்க மாட்டார் என்று எதிர்பார்ப்பது எவ்வளவு அபத்தமான காரியம்! [34]

[34] இயேசுவை விசுவாசிப்பதினால் நாம் இலவச ஈவாகப் பெற்றிருக்கும், நமது கணக்கில் வைக்கப்படும் நீதியை, சட்டபூர்வமான நீதியை இயேசுவானவர் குறிப்பிட்டிருப்பாரானால், ஏன் அவர் அதைச் சுட்டிக்காட்டவில்லை? அவர் கல்வியறிவில்லாதவர்களிடம் பேசிக்கொண்டிருந்தார்; அவர்களால் மிக எளிதாகத் தவறாகப் புரிந்துகொள்ளப்படக் கூடிய ஒரு காரியத்தை அவர் ஏன் சொல்ல வேண்டும்? அவர்கள் ஒருபோதும் கணக்கில் வைக்கப்பட்ட நீதியை யூகித்திருக்க முடியாது!





வசனத்தின் தெளிவான அர்த்தத்தை ஏற்றுக்கொள்ள நமக்கு விருப்பமில்லை என்பதுதான் பிரச்சினையாகும். ஏனென்றால் அது நமக்குப் பிரமாணவாதம்போலத் தொனிக்கிறது. ஆனால் கணக்கில் வைக்கப்படும் நீதிக்கும், செயல்பூர்வமான நீதிக்கும் இடையேயுள்ள பிரிக்கமுடியாத பிணைப்பை நாம் புரிந்துகொள்ளாததே மெய்யான பிரச்சினையாகும். அப்போஸ்தலனாகிய யோவான் இப்படி எழுயிருக்கிறார்: ''பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்'' [1 யோவான் 3:7]. யோவான் கூறியிருக்கிறபடி புதிய பிறப்புக்கும் செயல்பூர்வமான நீதிக்கும் இடையேயுள்ள பிணைப்பையும் நாம் புரிந்துகொள்ளவில்லை: ''அவர் நீதியுள்ளவராயிருக்கிறாரென்று உங்களுக்குத் தெரிந்திருப்பதினால், நீதியைச் செய்கிறவனெவனும் அவரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள்'' [1 யோவான் 2:29].

இயேசுவானவர் தமது 5:20 வசனத்தோடுகூட இதையும் சேர்த்திருக்கலாம்: ''நீங்கள் மனந்திரும்பி, மெய்யாகவே மறுபடியும் பிறந்து, ஜீவனுள்ள விசுவாசத்தின்மூலமாக எனது நீதியின் இலவச ஈவைப்பெற்றிருப்பீர்களானால், நீங்கள் எனது உள்ளே வாசம்பண்ணும் ஆவியானவரின் வல்லமையோடு ஒத்துழைக்கும்போது, உங்கள் செயல்பூர்வமான நீதி வேதகபாரகர் பரிசேயரின் நீதியைவிட அதிகரிக்கும்.''

## வேதபாரகரையும் பரிசேயரையும்விடப் பரிசுத்தமாக இருப்பது எப்படி

இயேசுவானவர் 5:20 வசனத்தில் கூறியுள்ள காரியம் இயல்பிலேயே இந்தக் கேள்வியை நமக்குள் எழுப்பும்: வேதபாரகரும், பரிசேயரும் எவ்வளவுதூரம் நீதியுள்ளவர்களாக இருந்தார்கள்? *அதிகமாக இல்லை* என்பதே பதிலாகும்.

மற்றொரு இடத்தில் அவர்களைக் குறித்து இயேசுவானவர் இப்படிச் சொல்லியிருக்கிறார்: ''மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்'' [மத். 23:27]. அதாவது, அவர்கள் வெளியரங்கமாக நீதியுள்ளவர்களைப்போலக் காட்சியளித்தாலும் உள்ளுக்குள் தீமை நிறைந்தவர்களாக இருந்தார்கள். நியாயப்பிரமாணத்

தின் *எழுத்தைக்* கைக்கொண்டு, அதன் *ஆவியை* அவர்கள் புறக்கணித் தார்கள். பெரும்பாலும் தேவனுடைய கட்டளைகளைத் திரித்து அல்லது மாற்றித் தங்களைத்தாங்களே நியாயப்படுத்திக்கொண்டார்கள்.

மலைப்பிரசங்கத்தின் எஞ்சிய பகுதியில் இயேசுவானவர் வேதபாரகர், பரிசேயரின் இந்தப் பிழையை வெளியரங்கமாக்கியிருக் கிறார். நன்கு அறியப்பட்ட தேவனுடைய கட்டளைகளை அவர் மேற்கோளாக எடுத்துச் சொல்லி, ஒவ்வொரு பிரமாணத்தின் எழுத்தையும் ஆவியையும் கைக்கொள்ளுவதற்கு இடையேயுள்ள வேறுபாட்டைச் சுட்டிக்காட்டியிருக்கிறார். இப்படிச் செய்யும்போது, அவர் மறுபடியும் மறுபடியுமாக வேதபாரகர், பரிசேயரின் மாய்மாலத்தை வெளிப்படுத்தியிருக்கிறார், தமது சீஷர்களிடம் தாம் எதிர்பார்ப்பதையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஒவ்வொரு எடுத்துக்காட்டிலும் இயேசு ''கேள்விப்பட்டிருக் கிறீர்களே'' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார். பழைய ஏற்பாட்டுச் சுருள்களை தங்களால் வாசிக்க முடியாமல், ஜெப ஆலயங்களில் வேதபாரகராலும், பரிசேயராலும் வாசிக்கப்பட்டவை களைக் கேள்விப்பட்ட மக்களுக்கே அவர் இவைகளைச் சொல்லுகிறார். அதாவது இப்போது அவருடைய பேச்சைக் கேட்பவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் பொய்யான போதனைகளுக்குச் செவிகொடுத்து வந்திருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தைக்கு வேதபாரகரும் பரிசேயரும் திரித்து விளக்கம் கூறுவதைக் கேட்டிருக்கிறார்கள், அவர்களுடைய பரிசுத்தமில்லாத வாழ்க்கை முறையைக் கண்டு வந்திருக்கிறார்கள்.

### வேதபாரகர் பரிசேயரைப் போலல்லாமல் ஒருவர் மற்றவர்மீது அன்புகாட்டுங்கள்

ஆறாவது கட்டளையைத் தமது முதல் மேற்கோளாக எடுத்துச் சொல்லுவதின்மூலம் இயேசுவானவர் நமது சீஷர்களிடமிருந்து தேவன் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை அவர்களுக்குப் போதிக்கத் துவங்கினார். அதே வேளையில் வேதபாரகர் பரிசேயரின் மாய்மாலத் தையும் வெளிப்படுத்தினார்.

> கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலை செய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்களே. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப் பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்;





> மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான் (மத். 5:21–22).

முதலாவதாக, ஒரு நபரை நரகத்தில் தள்ளக்கூடிய ஒன்றைக்குறித்து இயேசு எச்சரிப்பதைக் கவனியுங்கள். இதுவே அவருடைய அடிப்படையான கருப்பொருளாகும் – *பரிசுத்தமுள்ளவர்கள் மட்டுமே தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.*

வேதபாரகரும் பரிசேயரும் ஆறாவது கட்டளையைச் சுட்டிக்காட்டி கொலைபாதகத்துக்கு விரோதமாகப் போதித்தார்கள். அது ஒருவனை நீதிமன்றத்துக்கு இழுத்துச் செல்லும் என்று எச்சரித்தார்கள்.

ஆனால் இயேசுவானவர் வேதபாரகரும் பரிசேயரும் உணரத் தவறிய காரியங்களைத் தமது சீஷர்களுக்கு எடுத்துச் சொல்லி, கொலைபாதகத்தைவிடக் குறைவான காரியங்களும்கூட அவர்களைத் தேவனுடைய நீதிமன்றத்துக்கு இழுத்துச் செல்லும் என்று எச்சரித்திருக் கிறார். நாம் ஒருவர் மற்றவரிடம் அன்புகாட்டுவது மிக முக்கியமானதாக இருக்கிறபடியால் (இரண்டாவது பிரதான கற்பனை) நாம் ஒரு சகோதரனிடம் கோபப்படும்போதே தேவனுடைய நீதிமன்றத்தில் நாம் குற்றவாளியாக நிற்கிறோம் என்பதை உணர வேண்டும். நாம் நமது கோபத்தின் காரணமாகத் தயவில்லாத சொல்லைச் சொல்லு வோமானால் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு இன்னுமதிகப் பாத்திர வான்களாக இருக்கிறோம். இதற்கும் அதிகமாக மேலும் மோசமான சொற்களை நாம் சொல்லுவோமானால், தேவனால் நரகத்தில் தள்ளப்படும் அளவுக்குக் குற்றவாளிகளாக இருக்கிறோம்.[35] இது தீவிரமான காரியமாகும்.

நாம் நமது சகோதரர்களோடு கொண்டிருக்கும் உறவைக் கொண்டு தேவனோடுள்ள நமது உறவு அளக்கப்படுகிறது. நாம் ஒரு சகோதரனை வெறுப்போமானால், நாம் நித்தியஜீவனைச் சுதந்தரிக்க வில்லை என்பதை அது வெளிப்படுத்துகிறது. யோவான் இப்படிச் சொல்லியிருக்கிறார்:

> தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலை பாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள். (1 யோவான் 3:15).
>
> தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன்

[35] இது கிறிஸ்துவில் நமது சகோதர சகோதரிகளோடுள்ள உறவைக் குறித்ததாகும். வேதவசனம் பொதுவாகச் சொல்லுவதுபோல (பார்க்க, நீதி. 1:7; 13:20) இயேசுவானவர் சில சமயத்தலைவர்களை ''மதிகேடரே'' என்று அழைத்திருக்கிறார் (மத். 23:17).

> பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூரா மலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? (1 யோவான் 4:20).

நாம் ஒருவர் மற்றவர்மீது அன்புகாட்டுவதும், ஒருவர் மற்றவரைக் காயப்படுத்தும்போது, இயேசுவானவர் சொன்னதைப்போல ஒப்புரவாகு தலை நாடுவதும் எவ்வளவு முக்கியமானது? (பார்க்க, மத். 18:15–17).

இயேசுவானவர் தொடர்ந்து இவ்வாறு சொல்லுகிறார்:

> ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து (மத். 5:23–24).

அதாவது, நமது சகோதரனோடு நமது உறவு சரியாக இல்லாவிட்டால், தேவனோடுள்ள நமது உறவும் சரியாக இல்லை என்று அர்த்தமாகும். பரிசேயர்கள் சிறிய காரியங்களைப் பெரிதுபடுத்தியும், பெரிய காரியங்களை அலட்சியப்படுத்தியும் குற்றம்புரிந்தவர்களாக இருந்தார்கள். இயேசுவானவர் அவர்களைக் குறித்து ''கொசுகில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறார்கள்'' என்று சொல்லியிருக்கிறார் (மத். 23:23–24). அவர்கள் தசமபாகம் கொடுப்பதையும் காணிக்கை கொடுப்பதையும் வலியுறுத்தினார்கள். ஆனால் இரண்டாவது பிரதான கற்பனையாகிய தன்னைப்போலப் பிறனிடத்திலும் அன்புகூர வேண்டும் என்ற கட்டளையைப் புறக்கணித்தார்கள். தேவனுடைய இரண்டாவது மிகப்பெரிய கட்டளையை மீறிவிட்டு, அவர்மீதான அன்பைக் காட்டும்படியாகக் காணிக்கை கொண்டுவருவது எவ்வளவு மாய்மாலமான காரியம்! இதைக்குறித்துத் தான் இயேசுவானவர் எச்சரித்தார்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பின் கண்டிப்பைக் குறித்து இயேசுவானவர் மேலும் கூறுகிறார்:

> எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம் பொருந்து. பொருந்தாவிட்டால், நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்பட மாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் (மத். 5:25–26).





கூடுமானவரையில் நமது சகோதரரோடு சமாதானத்தில் வாழ்ந்து, தேவனுடைய நீதிமன்றத்தைத் தவிர்ப்பது நல்லதாகும். ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ நம்மீது கோபமாக இருப்பார்களானால், ''வழியில் இருக்கும்போதே'' அதாவது நமது வாழ்க்கைப் பயணத்தில் அவர்களோடு ஒப்புரவாகாமல் பிடிவாதமாக இருப்போமானால், தேவனுக்கு முன்பாக நிற்கும்போது நாம் வருத்தப்பட வேண்டியிருக்கும். இயேசுவானவர் இங்கே சொல்லியிருப்பது மன்னிக்க முடியாத ஊழியக்காரனைக் குறித்து அவர் மத்தேயு 18:23–35 வசனங்களில் கூறியிருப்பவைகளுக்கு ஒத்திருக்கிறது. தான் மன்னிக்கப்பட்ட பிறகும் தனது உடன் ஊழியக்காரனை மன்னிக்க மறுத்த அந்த வேலைக்காரன் தனது கடனைத் திரும்பக் கொடுக்கும் வரைக்கும் உபாதிக்கிறவர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டான் (மத். 18:34). தேவன் எதிர்பார்க்கிறபடி நமது சகோதரனிடத்தில் நான் அன்புகூராவிட்டால் ஏற்படும் பின்விளைவுகளைக் குறித்து இங்கேயும் இயேசுவானவர் எச்சரிக்கிறார்.

## வேதபாரகரையும் பரிசேயரையும் போலல்லாமல் பாலுறவில் பரிசுத்தமாக இருங்கள்

வேதபாரகரும் பரிசேயரும் நியாயப்பிரமாணத்தின் வார்த்தையைக் கைக்கொண்டு ஆவியைப் புறக்கணிக்கிறார்கள் என்பதற்கு இரண்டாவது எடுத்துக்காட்டாக இயேசுவானவர் ஏழாவது கட்டளையைச் சுட்டிக்காட்டுகிறார். தமது சீஷர்கள் வேதபாரகரையும் பரிசேயரையும் விடப் பாலுறவுரீதியாகப் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்:

> விபசாரஞ் செய்யாதிருப்பாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று. உன் வலது கண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும். உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும் (மத். 5:27–30).

இயேசுவானவர் தமது அடிப்படைக் கருப்பொருளை மறுபடியுமாக வலியுறுத்துவதைக் கவனியுங்கள் – பரிசுத்தமுள்ளவர்கள் மட்டுமே தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். அவர் மறுபடியுமாக நரகத்தைக் குறித்து எச்சரித்து, அதற்குச் செல்லாமல் தப்ப வேண்டுமானால் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் சொல்லுகிறார்.

வேதபாரகராலும் பரிசேயராலும் ஏழாவது கட்டளையை முழுவதுமாகப் புறக்கணிக்க முடியாமல் இருந்தது. அதனால் அவர்கள் வெளியரங்கமாக அதற்குக் கீழ்ப்படிந்து தங்கள் மனைவிக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள். என்றாலும் மற்றப் பெண்களோடு தொடர்பு கொண்டிருப்பதாகக் கனவுகண்டார்கள். சந்தைவெளியில் தாங்கள் பார்க்கும் பெண்ணின் ஆடைகளைத் தங்கள் மனதில் உரிந்து பார்த்தார்கள். அவர்கள் இப்படி இருதயத்தில் விபச்சாரம் செய்கிறவர்களாக இருந்தபடியால், ஏழாம் கட்டளையை மீறினார்கள். சபையிலிருப்பவர்களில் எத்தனைபேர் இதைப் போல இருக்கிறார்கள்?

மக்கள் பாலுறவுரீதியாக முழுமையான பரிசுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய நோக்கமாகும். உங்கள் அண்டைவீட்டுக்காரனின் மனைவியோடு பாலுறவு கொள்ளுவது எவ்வளவு தவறான காரியமோ, அப்படிச் செய்வதாக நினைப்பதும் தவறான காரியமாகும். ஏற்கெனவே மோசேயின் நியாயப்பிரமாணத்தில் கூறப்பட்டிருந்ததைவிடக் கடுமையான பிரமாணத்தை இயேசுவானவர் கொடுக்கவில்லை. பத்தாவது கட்டளை இச்சைக்கு விரோதமான எச்சரிப்பைத் தெளிவாகக் கொடுத்திருந்தது: ''பிறனுடைய மனைவியையும் ... இச்சியாதிருப்பாயாக'' [யாத். 20:17].

இயேசுவானவரின் பேச்சைக் கேட்ட எவராவது குற்ற உணர்வைப் பெற்றார்களா? கண்டிப்பாகப் பெற்றிருப்பார்கள். அப்படியானால் அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? இயேசுவானவர் போதித்தபடி அவர்கள் உடனடியாக மனந்திரும்பியிருக்க வேண்டும். இச்சைக்கு இடம்கொடுப்பவர்கள் நரகத்துக்குச் செல்லுகிறபடியால், கிரயம் கொடுக்க வேண்டியிருந்தாலும், இச்சை கொள்ளுவதை நிறுத்தியாக வேண்டும்.

பகுத்தறிவுள்ள எவரும் இயேசுவானவர் இச்சைகொள்ளும் ஒவ்வொருவரும் தங்கள் கண்ணைப் பிடுங்கிப் போட வேண்டும், கைகளை வெட்டிவிட வேண்டும் என்று வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் கொள்ளும் வகையில் சொல்லியிருப்பார் என்று நினைக்க மாட்டார்கள். இச்சை கொள்ளும் ஒருவன் ஒரு கண்ணைப் பிடுங்கி விட்டாலும், அவன் இச்சைகொள்ளும் ஒற்றைக் கண்ணனாகவே இருக்கிறான். ஏழாவது கட்டளையின் ஆவிக்குக் கீழ்ப்படிவதைக்





குறித்து இயேசுவானவர் வலுவாக எச்சரித்திருக்கிறார். ஏனென்றால் நித்திய பாக்கியமே அதைச் சார்ந்திருக்கிறது.

கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி, சீஷர்களை உருவாக்கும் ஊழியர் தமது சீஷர்களிடம் அவர்களை இச்சை கொள்ளும்படி தூண்டும் எதையும் ''வெட்டிப்போடும்படி'' போதிக்க வேண்டும். அது கேபிள் தொடர்பாக இருக்குமானால், அதைத் துண்டிக்க வேண்டும். அது தொலைக்காட்சியாக இருக்குமானால் அதை அகற்ற வேண்டும். அது பத்திரிகையாக இருக்குமானால், அதன் சந்தாவை இரத்துசெய்ய வேண்டும். அது இணையதளமாக இருக்குமானால் அதைத் துண்டிக்க வேண்டும். நித்தியத்தையும் நரகத்தில் கழிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படாமலிருக்க வேண்டுமானால் இவைகளை அகற்ற வேண்டும். சீஷர்களை உருவாக்கும் ஊழியர் தமது மந்தையை மெய்யாகவே நேசிக்கிறபடியால், அவர் இயேசுவானவர் செய்ததுபோல, அவர்களிடம் சத்தியத்தைச் சொல்லி, அவர்களை எச்சரிக்க வேண்டும்.

## விபசாரம் செய்வதற்கு மற்றொரு வழி

இயேசுவானவரின் அடுத்த எடுத்துக்காட்டும் இதோடு தொடர்புடையதாகும். இது ஏற்கெனவே சொல்லப்படும் கருப்பொருளுக்கு விரிவாக்கமேயொழிய புதிய கருப்பொருள் அல்ல. ''பரிசேயர் செய்யும் மற்றொரு காரியமும் விபசாரத்துக்கு இணையானதாகும்'' என்பதே இந்தக் கருப்பொருளாகும்.

> தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும், தள்ளுதற் சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ் செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் [மத். 5:31–32].

வேதபாரகரும் பரிசேயரும் நியாயப்பிரமாணத்தின் வார்த்தையைக் கைக்கொண்டு, அதன் ஆவியைப் புறக்கணித்ததற்கு இது மற்றொரு எடுத்துக்காட்டாகும்.

இயேசுவானவரின் நாட்களில் வாழ்ந்த ஒரு பரிசேயனை நாம் கற்பனைசெய்து பார்ப்போம். அவனுடைய வீட்டுக்கு எதிர்வீட்டில் ஒரு பெண் இருக்கிறாள், அவள்மீது அவன் இச்சை கொள்ளுகிறான். ஒவ்வொரு நாளும் அவன் அவளைச் சந்திக்கிறான். அவளும் தன்னால் கவரப்பட்டிருப்பதுபோல அவன் நினைக்கிறான், அவனுடைய ஆசையும் அதிகரிக்கிறது. அவளோடு தொடர்புகொள்ளுவதாக அவன் கனவுகாண்கிறான். அவள் எனக்குக் கிடைத்தால் எப்படியிருக்கும்?

ஆனால் இதில் ஒரு பிரச்சினை இருக்கிறது. அவன் திருமணமானவன், அவளும் திருமணமானவள். அவர்களுடைய மதக் கட்டளையின்படி விபசாரம் செய்யக் கூடாது. அவன் ஏழாவது கட்டளையை மீற விரும்பவில்லை [ஆனால் அவன் ஒவ்வொரு முறை இச்சைகொள்ளும் போதும் அதை மீறியிருக்கிறான்]. இப்போது அவளைப் பெறுவதற்கு அவன் என்ன செய்ய முடியும்?

ஒரு தீர்வு இருக்கிறது! இருவரும் தங்களுடைய இப்போதைய வாழ்க்கைத் துணையை விவாகரத்துச் செய்துவிட்டால், தான் விரும்பும் அவளை மணந்துகொள்ளும் வாய்ப்பு அவனுக்குக் கிடைக்கும்! ஆனால் விவாகரத்தைப் பெறுவது சட்டபூர்வமானதா? சக பரிசேயன் ஒருவன் *ஆமாம்* என்று சொல்லுகிறான்! அதற்கு ஆதாரமாக ஒரு வேதவசனம் இருக்கிறது. உன் மனைவியை விவாகரத்துச் செய்யும்போது, அவளுக்குத் தள்ளுதற்சீட்டைக் கொடுக்க வேண்டும் என்று உபாகமம் 24:1 வசனம் சொல்லுகிறது. சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் விவாகரத்து சட்டபூர்வமானதாகும்! ஆனால் இந்தச் சூழ்நிலைகள் என்ன? தேவன் சொல்லியிருப்பதை அவன் கவனமாக வாசிக்கிறான்:

> ஒருவன் ஒரு ஸ்திரீயை விவாகம்பண்ணிக் கொண்ட பின்பு, அவளிடத்தில் இலச்சையான காரியத்தைக் கண்டு, அவள்மேல் பிரியமற்றவனானால், அவன் தள்ளுதலின் சீட்டை எழுதி, அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பி விடலாம் [உபா. 24:1].

ஆகா! அவன் தன் மனைவியிடத்தில் இலச்சையான காரியத்தைக் காண முடியுமானால் அவளை விவாகரத்துச் செய்துவிடலாம். இலச்சையான காரியம் இருக்கிறது! அவள் எதிர்வீட்டுப் பெண்ணைப் போலக் கவர்ச்சிகரமாக இல்லை! [இந்த எடுத்துக்காட்டுக்கு ஆதாரம் இருக்கிறது. இயேசுவானவரின் நாட்களில் விவாகரத்தைக் குறித்த பிரபலமான பேச்சாளராகிய ரபி ஹில்லலின்படி தன் மனைவியைவிட அதிகக் கவர்ச்சிகரமான ஒரு பெண்ணை ஒருவன் பார்க்கும்போது, அவனுடைய பார்வையில் அவனுடைய மனைவி ''இலச்சையாகத்'' தோன்றுகிறபடியால் அவன் அவளை விவாகரத்துச் செய்ய முடியும். மனைவி கணவனின் உணவில் அளவுக்கு அதிகமான உப்பைப் போட்டாலும், மற்றொரு ஆணோடு பேசினாலும், அவனுக்கு ஒரு மகனைப் பெற்றுக்கொடுக்காவிட்டாலும் கணவன் அவளை விவாகரத்துச் செய்ய முடியும் என்று ரபி ஹில்லல் சொல்லியிருக்கிறார்].





எனவே சட்டப்பட்டி செயல்படுகிறவனாகிய நம்முடைய பரிசேயன் தன் மனைவியிடம் தள்ளுதற்சீட்டைக் கொடுத்து [பரிசேயரின் அலுவலகத்தில் இந்தச் சீட்டைப் பெற முடியும்] அவளை விவாகரத்துச் செய்துவிடுகிறான். எதிர்வீட்டுப் பெண்ணும் விவாகரத்துப் பெற, இவன் அவளைத் திருமணம்செய்து கொள்ளுகிறான். எல்லாமே தேவனுடைய பிரமாணத்துக்குக் கீழ்ப்படிந்து செய்யப்பட்டிருக்கிறபடியால் எந்தவிதக் குற்ற உணர்வும் இல்லை!

## ஒரு மாறுபட்ட பார்வை

ஆனால் தேவனோ காரியங்களை வேறுபட்ட வகையில் காண்கிறார். உபாகமம் 24:1—4 வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ''இலச்சையான காரியம்'' எது என்பதையும், அது விவாகரத்துக்குச் சட்டபூர்வமான காரியமா என்பதையும் அவர் தெளிவுபடுத்தவில்லை. உண்மையில் இந்தப் பகுதியில் எப்போது விவாகரத்து சட்டபூர்வமானதாக இருக்கிறது, எப்போது சட்டபூர்வமானதாக இருக்கவில்லை என்பதைக் குறித்துக் கூறப்படவில்லை. இருமுறை விவாகரத்துப் பெறுவதற்கு விரோதமாகவும், ஒருமுறை ஒருவனிடமிருந்து விவாகரத்துப் பெற்று மற்றொருவனை மணந்த பெண் இரண்டாமவன் இறந்தபிறகு முதல் கணவனை மணந்துகொள்ளுவதற்கு விரோதமாகவுமே இந்த வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியின் அடிப்படையில் விவாகரத்தைச் சட்டபூர்வமாக்கக்கூடிய வகையில் தேவனுடைய பார்வையில் ''இலச்சையான காரியம்'' இருக்கிறது என்று சொல்லுவது இந்தப் பகுதியில் பலவந்தமாக அர்த்தத்தைத் திணிப்பதாகும்.

எப்படியிருப்பினும், இப்போது நான் விவரித்த கற்பனையான மனிதன் தேவனுடைய பார்வையில் விபசாரம் செய்தவனாகவே இருக்கிறான். அவன் ஏழாவது கட்டளையை மீறியிருக்கிறான். உண்மையில் இவன் ''இரட்டை விபசாரம்'' செய்தவனாக இருக்கிறபடியால் சாதாரண விபசாரக்காரனைவிட அதிகக் குற்றவாளியாக இருக்கிறான். இது எப்படி? முதலில் அவன் விபசாரம் செய்தவனாக இருக்கிறான். இயேசுவானவர் பின்னொரு இடத்தில் ''எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ்செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால், அவன் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான்'' என்று சொல்லியிருக்கிறார் [மத். 19:9].

இரண்டாவதாக, இப்போது அவனால் விவாகரத்துச் செய்யப்பட்ட பெண் தான் பிழைப்பதற்காக மற்றொரு ஆணைத் திருமணம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறபடியால், அந்தப் பரிசேயன் தேவனுடைய பார்வையில் தன் மனைவியை வேறொருவனோடு பாலுறவு கொள்ளும்படி பலவந்தம் பண்ணுகிறவனாகக் காணப்படுகிறான். இப்படியாக அவன்

அவளுடைய ‘‘விபசாரத்துக்குக்’’ குற்றவாளியாகிறான்.[36] ‘‘நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ் செய்யப் *பண்ணுகிறவனாயிருப்பான்’’* என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார் [மத். 5:32 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

‘‘அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்’’ என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறபடியால் [மத். 5:32] இவனுடைய குற்றத்துக்கும் அந்தப் பரிசேயனே காரணமாக இருக்கிறபடியால் அவன் ‘‘மும்முறை விபசாரம்’’ செய்த குற்றவாளி என்று இயேசுவானவர் குற்றம் சாட்டியிருக்கலாம். [37]

இயேசுவானவரின் நாட்களில் இது மிக முக்கியமான பிரச்சினையாக இருந்தது. மற்றொரு இடத்தில் பரிசேயர் அவரிடம் ‘‘புருஷனானவன் தன் மனைவியை எந்த முகாந்தரத்தினாலாகிலும் தள்ளிவிடுவது நியாயமா’’ என்று கேட்டிருக்கிறார்கள் [மத். 19:3]. இந்தக் கேள்வி அவர்களுடைய இருதயத்திலிருப்பதை வெளிப்படுத்துகிறது. அவர்களில் சிலராவது எந்தக் காரணம் என்றாலும் விவாகரத்து சட்டபூர்வமானது என்று அறிந்துகொள்ள ஆசைப்பட்டார்கள்.

கிறிஸ்தவர்கள் விவாகரத்தைக் குறித்த இதே வசனங்களை எடுத்துக்கொண்டு, அவைகளுக்குத் தவறான அர்த்தம் சொல்லி, தேவனுடைய பிள்ளைகளைப் பாரமான சங்கிலிகளால் பூட்டிவைப்பது எவ்வளவு அவமானமான காரியம்! பாவியாக இருக்கும்போது விவாகரத்துப் பெற்றிருந்த ஒருவனோ அல்லது ஒருத்தியோ கிறிஸ்துவை நேசிக்கும் ஒரு அற்புதமான பெண்ணையோ அல்லது ஆணையோ கண்டு திருமணம் செய்துகொள்ளுவதை இயேசுவானவர் குறிப்பிடவில்லை. இது ஒருபோதும் விபசாரத்துக்கு இணையான

[36] உண்மையில் அவள் மறுபடியுமாகத் திருமணம் செய்துகொள்ளும்போது, தேவன் அவளை விபசாரம் செய்தவளாக எடுத்துக்கொள்ளுவதில்லை. ஏனென்றால் அவள் தனது கணவனின் பாவத்தினால் பாதிக்கப்பட்டவளாக இருக்கிறாள். அவள் மறுபடியும் திருமணம் செய்துகொண்டாலே இயேசுவின் வார்த்தைகள் அர்த்தமுள்ளவையாக இருக்கின்றன. இல்லாவிட்டால் எந்த வகையிலும் அவள் விபசாரக் குற்றம் செய்தவள் என்று சொல்ல முடியாது.

[37] மறுபடியுமாக, தேவன் இந்தப் புதிய கணவன்மீது விபசாரக் குற்றத்தைச் சுமத்தமாட்டார். அவன் விவாகரத்துப் பெற்ற ஒரு பெண்ணை மணந்துகொண்டு, அவளுக்கு ஆதரவளிக்கிறபடியால் நற்கிரியையே செய்திருக்கிறான். என்றாலும், ஒருவன் தன்னை மணப்பதற்காகக் கணவனை விவாகரத்துச் செய்யும்படி ஒரு பெண்ணைத் தூண்டியிருப்பானானால், அவன் விபசாரக் குற்றம் புரிந்தவனாக இருக்கிறான். இந்தப் பாவத்தையே இயேசுவானவர் இங்கே கருத்தில் கொண்டிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்.





காரியமாகாது! இப்படிச் செய்கிறவர்களை விபசாரம் செய்தவர்கள் என்று நாம் தவறாகப் போதிப்போமானால், பிறகு சுவிசேஷத்தையே மாற்ற வேண்டியிருக்கும். ஏனென்றால் அது பாவிகளின் எல்லாப் பாவங்களுக்கும் மன்னிப்பைக் கொடுக்கவில்லை என்றாகிவிடுமே? இப்போதிலிருந்து நாம் ‘‘இயேசு உனக்காக மரித்தார். நீ மனந்திரும்பி, அவரை விசுவாசிப்பாயானால், உன்னுடைய எல்லாப் பாவங்களும் மன்னிக்கப்படும். *என்றாலும்,* நீ ஏற்கெனவே விவாகரத்துப் பெற்றிருப்பாயானால், மறுபடியும் திருமணம் செய்துகொள்ளாதே. இல்லாவிட்டால் நீ விபசாரத்தில் வாழுகிறவனாக ஆகிவிடும். விபசாரக்காரர்கள் நரகத்துக்குச் செல்லுவார்கள் என்று வேதாகமம் சொல்லுகிறது. நீ கிறிஸ்துவிடம் வருவதற்கு முன்பு விவாகரத்துச் செய்துவிட்டு மறுபடியமாகத் திருமணம் செய்துகொண்டிருப்பாயானால் இப்போது உனக்கு மனைவியாக இருப்பவளை நீ விவாகரத்துச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நீ தொடர்ந்து விபசாரத்தில் வாழ்ந்துகொண்டிருப்பாய். விபசாரக்காரர்கள் இரட்சிக்கப்பட முடியாது’’ என்று பிரசங்கிக்க வேண்டியிருக்கும்.[38] இது சுவிசேஷம் ஆகுமா? [39]

## வேதபாரகர் பரிசேயரைப் போலல்லாமல் நேர்மையோடு இருங்கள்

அநீதியான நடத்தை மற்றும் வேதபாரகர் பரிசேயர் வேதவசனத்தைத் திரித்துக்கூறுவதற்கு இயேசுவானவர் எடுத்துச் சொல்லும் மூன்றாவது எடுத்துக்காட்டு, சத்தியத்தைச் சொல்ல வேண்டும் என்ற தேவனுடைய கட்டளையோடு தொடர்புடையதாகும். வேதபாரகரும் பரிசேயரும் பொய் சொல்லுவதற்கு ஒரு ஆக்கபூர்வமான வழியைக் கண்டுபிடித்திருந்தார்கள். மத்தேயு 23:16–22 வசனங்களிலிருந்து தாங்கள் ஆலயத்தின்மீதோ, பலிபீடத்தின்மீதோ அல்லது பரலோகத்தின்மீதோ ஆணையிட்டால் அந்த ஆணையை நிறைவேற்றத் தாங்கள் கடமைப்பட்டிருக்கவில்லை என்று அவர்கள் நினைத்தார்கள் என்று அறிகிறோம். ஆனால் அவர்கள் ஆலயத்திலுள்ள *தங்கத்தின்*மீதோ, பலிபீடத்திலுள்ள *காணிக்கையின்*மீதோ அல்லது பரலோகத்திலுள்ள *தேவன்*மீதோ ஆணையிடுவார்கள் என்றால் அந்த ஆணையைக் காப்பாற்ற வேண்டும். இது ஒரு சிறுபிள்ளை தனது மனதுக்குள் வித்தியாசமாக நினைத்துக்கொண்டு வாக்குக்கொடுத்தால் அதை

[38] உண்மையில் மற்றச் சூழ்நிலைகளைக் குறித்தும் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக, ஒரு கிறிஸ்தவப் பெண்ணின் இரட்சிக்கப்படாத கணவன் அவளை விவாகரத்துச் செய்ய, அவள் ஒரு கிறிஸ்தவனை மணந்துகொண்டால், அவள் விபசாரக் குற்றம் செய்தவள் அல்ல.

[39] விவாகரத்து மற்றும் மறுபடியுமாகத் திருமணம் செய்துகொள்ளுதல் இவை குறித்த மற்றொரு அத்தியாயத்தில் இன்னும் விரிவாக இதைப்பற்றிப் பார்ப்போம்.

நிறைவேற்ற வேண்டியதில்லை என்று சிறுபிள்ளைத்தனமாக நினைப்பதற்கு ஒப்பாக இருக்கிறது! தமது சீஷர்கள் உண்மையைப் பேச வேண்டும் என்று இயேசுவானவர் விரும்புகிறார்:

> அன்றியும், பொய்யாணையிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப் பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பரிச்சேதம் சத்தியம்பண்ண வேண்டாம்; வானத்தின்பேரில் சத்தியம்பண்ண வேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம். பூமியின்பேரிலும் சத்தியம் பண்ண வேண்டாம், அது அவருடைய பாதபடி; எருசலேமின்பேரிலும் சத்தியம்பண்ண வேண்டாம், அது மகாராஜாவினுடைய நகரம். உன் சிரசின்பேரிலும் சத்தியம்பண்ண வேண்டாம், அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே. உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும் [மத். 5:33–37].

எதன்மீதாவது ஆணையிடுவதைக் குறித்து தேவனுடைய ஆதிக்கட்டளையில் ஒன்றும் சொல்லப்படவில்லை. தமது மக்கள் எப்போதுமே சத்தியத்தைப் பேச வேண்டும் என்பதே தேவனுடைய நோக்கமாக இருந்தபடியால் சத்தியம்பண்ணுவதற்கான தேவையே இல்லாமலிருக்கிறது.

உறுதிமொழி எடுத்துக்கொள்ளுவதில் எந்தத் தவறும் இல்லை. உண்மையில், தேவனுக்குக் கீழ்ப்படிவதாக உறுதிமொழி எடுத்துக் கொள்ளுவது நல்லதாகும். இயேசுவைப் பின்பற்றுவதான உறுதிமொழியோடு இரட்சிப்பு துவங்குகிறது. ஆனால் மற்றவர்கள் தங்களை நம்பும்படி செய்வதற்காக மக்கள் எதன்மீதாவது சத்தியம்பண்ணும்போது, *அது தாங்கள் இயல்பாகப் பொய் சொல்லுகிறவர்கள் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளுவதாகும்.* எப்போதுமே உண்மையைச் சொல்லுகிறவர்கள் சத்தியம்பண்ண வேண்டிய அவசியமே கிடையாது. ஆனால் இன்று சபை பொய்யர்களால் நிறைந்திருக்கிறது, பெரும்பாலும் ஊழியர்களே வஞ்சகம்செய்வதில் தலைவர்களாக இருக்கிறார்கள்.

சீஷர்களை உருவாக்கும் ஊழியர் உண்மைக்கு முன்மாதிரியானவராக நடந்துகொள்ளுகிறார். எப்போதுமே உண்மையைப் பேசும்படி தனது சீஷர்களுக்குப் போதிக்கிறார். ‘‘பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்’’ என்று யோவான் சொல்லியிருப்பதை அவர்கள் அறிவார்கள் [வெளி. 21:8].





## வேதபாரகரையும், பரிசேயரையும்போலப் பழிவாங்காதிருங்கள்

பழைய ஏற்பாட்டில் நன்கு அறியப்பட்ட ஒரு வசனத்தைப் பரிசேயர்கள் எப்படித் திரித்திருக்கிறார்கள் என்று இயேசுவானவர் எடுத்துக்காட்டுகிறார். வேதாகமத்துக்கு அர்த்தம்காணுதல் பற்றிய அத்தியாயத்தில் நாம் ஏற்கெனவே இந்தப் பகுதியைக் குறித்துப் பார்த்திருக்கிறோம்:

> கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்துநிற்க வேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ. உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகங் கோணாதே [மத். 5:38–42].

ஒருவன் மற்றொரு நபரைக் காயப்படுத்தியதற்காக நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்படுவானானால், அவன் இழைத்த தீங்குக்குச் சமமாக அவனுக்குத் தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்று மோசேயின் நியாயப்பிரமாணம் சொல்லுகிறது. அவன் மற்றொருவரின் பல்லைத் தட்டி விழப்பண்ணியிருந்தால், அவனுடைய பல்லைத் தட்டி விழச் செய்வதே நீதியும் நியாயமுமானதாகும். பெரிய குற்றங்களுக்காக நீதிமன்றங்களில் சரியான தீர்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதற்காக இந்தக் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், வேதபாரகரும் பரிசேயரும் அதை மறுபடியுமாகத் திரித்து, பழிவாங்குதல் ஒரு பரிசுத்தமான கடமை என்று சொல்லிவந்தார்கள். அதாவது ‘‘கொஞ்சமும் சகித்துக்கொள்ளக்கூடாது’’ என்ற கொள்கையை அவர்கள் பின்பற்றினார்கள். சிறிய குற்றங்களுக்கும்கூட அவர்கள் பழிவாங்குதலை நாடினார்கள்.

தேவனோ எப்போதுமே தமது மக்களிடமிருந்து அதிகமாக எதிர்பார்க்கிறார். பழிவாங்குதலை அவர் திட்டவட்டமாகத் தடைசெய்திருக்கிறார் [பார்க்க, உபா. 32:35]. தேவனுடைய மக்கள் தங்கள் எதிரிகளிடமும் தயவுகாட்ட வேண்டும் என்றே பழைய ஏற்பாடு போதிக்கிறது[பார்க்க, யாத். 23:4–5; நீதி. 25:21–22]. தீய மக்களோடு

இடைபடும்போது மற்றக் கன்னத்தைக் காட்டும்படியாகவும், மேலும் ஒரு மைல் தூரம் நடந்துசெல்லும்படியாகவும் இயேசு தமது சீஷர்களிடம் சொல்லி, இதை உறுதிப்படுத்தியிருக்கிறார். நமக்குத் தீங்கிழைக்கப் படும்போதும் நாம் இரக்கத்தோடு நடந்துகொண்டு, தீமைக்குப் பதிலாக நன்மையைச் செய்ய வேண்டும் என்றே தேவன் எதிர்பார்க்கிறார்.

ஆனால் மக்கள் இதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, நமது வாழ்க்கையை அழித்துப்போடும் அளவுக்குத் தீங்குசெய்ய நாம் அனுமதிக்க வேண்டும் என்று இயேசுவானவர் எதிர்பார்க்கிறாரா? நமக்கு எதிராகச் செய்யப்பட்ட சட்டவிரோதமான காரியத்துக்காக ஒரு அவிசுவாசியை நீதிமன்றத்துக்கு இழுப்பது குற்றமாகுமா? இல்லை. இயேசுவானவர் பெரிய குற்றங்களுக்காக நீதிமன்றத்தில் நீதி தேடுவதைக் குறித்துச் சொல்லவில்லை. சிறிய, சாதாரணமான தீங்கு களுக்காகப் பழிவாங்குவதை எதிர்த்தே அவர் இதைச் சொல்லியிருக் கிறார். இப்போதுதான் நமது முதுகில் கத்தியால் குத்திய ஒருவன் நமது கழுத்தை நெறிக்கவும் நாம் அனுமதிக்க வேண்டும் என்று இயேசு சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். எவராவது நமது காரைக் கேட்டால் அவருக்கு நமது வீட்டையும் கொடுக்க வேண்டும் என்று அவர் சொல்லவில்லை. நாம் ஒவ்வொரு நாளும் அனுபவிக்கும் சிறிய தீங்குகளுக்கும், சுயநலமான மக்களோடு இடைபடும்போது எதிர்கொள்ள வேண்டியிருக்கும் காரியங்களுக்கும் பழிவாங்காமல் சகிப்புத்தன்மையையும் இரக்கத்தையும் காட்ட வேண்டும் என்றே இயேசுவானவர் சொல்லியிருக்கிறார். சுயநலமான மக்கள் எதிர்பார்ப் பதைவிட நாம் அதிக தயவோடு நடந்துகொள்ள வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். நமது பணத்தைக் குறித்துச் சுயநலமில்லாதவர்களாகக் கொடுத்துதவும், கடன் கொடுக்கவும் முன்வர வேண்டும். இந்தத் தகுதிநிலையை வேதபாரகரும் பரிசேயரும் எட்டவில்லை.

ஏன் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுபவர்களில் பலர் மிக எளிதாக எரிச்சலடைகிறார்கள்? கன்னத்தில் அறைவதைவிடப் பத்து மடங்கு சிறிய தீங்குகளுக்காகவும் அவர்கள் ஏன் உடனடியாகக் கோபப் படுகிறார்கள்? இவர்கள் உண்மையிலேயே இரட்சிக்கப்பட்டிருக்கிறார் களா? சீஷர்களை உருவாக்கும் ஊழியர் மறுகன்னத்தைக் காட்டுவதில் முன்மாதிரியாக இருந்து, தனது சீஷர்களும் அப்படியே செய்யும்படி போதிக்கிறார்.

## வேதபாரகரையும், பரிசேயரையும்போல உங்கள் எதிரிகளை வெறுக்காதிருங்கள்

இறுதியாக, தங்கள் விரோதத்தினால் நிறைந்த இருதயத்துக்கு ஏற்றபடி வேதபாரகரும் பரிசேயரும் மாற்றிக்கொண்ட ஒரு கட்டளையை இயேசுவானவர் சுட்டிக்காட்டுகிறார்:





> உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லு கிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங் கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத் திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ள வர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர் களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள் [மத். 5:43–48].

பழைய ஏற்பாட்டில் தேவன் ''உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக'' என்று சொல்லியிருக்கிறார் [லேவி. 19:18]. வேதபாரகரும் பரிசேயருமே தங்களிடம் அன்புகாட்டும் பிறரை மட்டுமே பிறன் என்று ஏற்றுக்கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் எல்லோரும் விரோதிகள். தேவன் பிறனை மட்டுமே நேசிக்கும்படி சொல்லியிருக்கிறபடியால், நமது எதிரிகளை வெறுப்பது நியாயம் என்று அவர்கள் நினைத்தார்கள். இயேசுவானவரைப் பொருத்தவரையில் இது தேவனுடைய நோக்கம் அல்ல.

*எல்லோரையும்* நாம் பிறனாகக் கருத வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகப் பின்னால் இயேசுவானவர் நல்ல சமாரியன் உவமைக்கதையைச் சொல்லியிருக்கிறார்.[40] நாம் நமது எதிரிகள் உட்பட எல்லோரிடமும் அன்புகாட்ட வேண்டும் என்று தேவன்

[40] யூதர்களின் நியாயசாஸ்திரி ஒருவனே தன்னை நியாயப்படுத்திக்கொள்ளும் விதமாக இயேசுவிடம் எனக்குப் பிறன் யார் என்று கேட்டான். தனக்குச் சரியான பதில் தெரியும் என்று அவன் நினைத்திருப்பான். ஆனால் இயேசுவானவர் அவனுக்கு நல்ல சமாரியனின் கதையைச் சொன்னார் [பார்க்க, லூக்கா 10:25–37].

விரும்புகிறார். தேவன் தாம் ஜீவிக்கும் தகுதிநிலையையே தமது மக்களுக்கும் நிறுவியிருக்கிறார். அவர் நல்லவர்களுக்கு மட்டுமல்ல, தீயவர்களுக்கும் பயிரை விளையச் செய்யும் சூரிய வெளிச்சத்தையும் மழையையும் கொடுக்கிறார். நாம் அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றி, தயவுகாட்டத் தகுதியில்லாதவர்களிடமும் தயவு காட்ட வேண்டும். நாம் அப்படிச் செய்யும்போது அது நாம் பரலோகத்திலிருக்கிற நமது பிதாவுக்குப் புத்திரராக இருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது [மத். 5:45]. மெய்யாகவே மறுபடியும் பிறந்தவர்கள் தங்கள் பிதாவான வரைப்போல நடந்துகொள்ளுகிறார்கள்.

நமது எதிரிகளிடம் நாம் காட்ட வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கும் அன்பு ஒரு உணர்வுமல்ல, அவர்களுடைய தீமைக்கு ஒப்புதலளிப்பதுமல்ல. நம்மை எதிர்ப்பவர்களைக் குறித்து நெருக்கமான அன்புகொள்ள வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கவுமில்லை. நமது எதிரிகள் அற்புதமான மக்கள் என்று உண்மையில்லாததைச் சொல்லும்படி அவர் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நாம் அவர்களிடம் இரக்கம் காட்ட வேண்டும் என்றும், அவர்களை வாழ்த்தி, அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்றும் அவர் எதிர்பார்க்கிறார்.

இயேசுவானவர் மறுபடியுமாகத் தமது கருப்பொருளை வலியுறுத்துவதைப் பாருங்கள் – *பரிசுத்தமுள்ளவர்கள் மட்டுமே தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.* தங்களிடம் அன்புகாட்டுகிறவர்களிடம் மட்டுமே தமது சீஷர்கள் அன்புகாட்டுவார்கள் என்றால், அவர்கள் புறஜாதிகளையும், ஆயக்காரரையும்விட மேலானவர்கள் அல்ல என்று இயேசுவானவர் சுட்டிக்காட்டினார். புறஜாதியாரும், ஆயக்காரரும் நரகத்துக்கே செல்லுவார்கள் என்பது ஒவ்வொரு யூதனின் எண்ணமாகும். அதாவது தங்களிடம் அன்புகாட்டுகிறவர்களிடம் மட்டுமே அன்புகாட்டுகிறவர்கள் நரகத்துக்கு செல்லுவார்கள்.

## வேதபாரகர் பரிசேயரைப்போலல்லாமல் சரியான செயல்நோக்கங்களுக்காக நன்மை செய்யுங்கள்

தம்மைப் பின்பற்றுகிறவர்கள் பரிசுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று இயேசுவானவர் எதிர்பார்ப்பது மட்டுமின்றி, அவர்கள் சரியான காரணங்களுக்காகப் பரிசுத்தராக இருக்க வேண்டும் என்றும் அவர் எதிர்பார்க்கிறார். தவறான நோக்கத்துக்காக ஒருவன் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவான் என்றால் அவன் தேவனுக்குப் பிரியமில்லாதவனாகவே இருப்பான். மற்றவர்களின் பாராட்டைப் பெறுவதற்காகவே வேதபாரகரும் பரிசேயரும் தங்கள் நற்கிரியைகளைச் செய்தபடியால் இயேசுவானவர் அவர்களைக் குற்றந்தீர்த்தார் [பார்க்க, மத். 23:5]. தமது சீஷர்கள் வித்தியாசமானவர்களாக இருக்க வேண்டுமென்றே அவர் எதிர்பார்க்கிறார்.





> மனுஷர் காண வேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பங்கில்லை. ஆகையால் நீ தர்மஞ்செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார் [மத். 6:1–4].

தம்மைப் பின்பற்றுகிறவர்கள் ஏழைகளுக்குத் தானதர்மம் செய்ய வேண்டுமென்று இயேசுவானவர் எதிர்பார்க்கிறார். நியாயப்பிரமாணத்தில் இந்தக் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது [யாத். 23:11; லேவி. 19:10; 23:22; 25:35; உபா. 15:7–11]. ஆனால் பரிசேயர்களோ தாங்கள் கொடுத்தபோது தாரை தப்பட்டையோடு அதை விளம்பரப்படுத்தினார்கள். என்றாலும் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுபவர்களில் எத்தனை பேர் ஏழைகளுக்குக் கொடுக்காமல் இருக்கிறார்கள்? இதனால் அவர்கள் தாங்கள் ஏன் தானதர்மம் செய்கிறோம் என்று செயல் நோக்கத்தை ஆராய்ந்துபார்க்க வேண்டிய தேவையே இல்லாமல் இருக்கிறது! வேதபாரகரும் பரிசேயரும் ஏழைகளுக்குக் கொடுத்தபோது தாரை ஊதுவிப்பதற்குச் சுயநலமே காரணமாக இருக்குமானால், கிறிஸ்தவர்கள் ஏழைகளின் நிலையைப் *புறக்கணிப்பதற்குச்* செயல் நோக்கம் என்ன? இந்தக் காரியத்தில் அவர்களுடைய நீதி வேதபாரகர் பரிசேயரின் நீதியைவிட அதிகமாக இருக்கிறதா?

பவுல் 1 கொரிந்தியர் 3:10–15 வசனங்களில் குறிப்பிடுவது போல நாம் தவறான காரணங்களுக்காக நற்கிரியைகளைச் செய்ய முடியும். நமது செயல்நோக்கங்கள் பரிசுத்தமானவையாக இராவிட்டால், நமது நற்கிரியைகளுக்குப் பலன் கிடைக்காது. பரிசுத்தமில்லாத செயல் நோக்கங்களுக்காகச் சுவிசேஷத்தைக்கூடப் பிரசங்கிக்க முடியும் என்று பவுல் சுட்டிக்காட்டியிருக்கிறார் [பார்க்க, பிலி. 1:15–17]. இயேசுவானவரின் ஆலோசனைப்படி, நாம் கொடுப்பதின் செயல்நோக்கத்தைப் பரிசுத்தமாகக் காத்துக்கொள்ளுவதற்கு ஒரு வழி இரகசியமாகக் கொடுப்பதுதான். நமது வலதுகை செய்வதை நமது இடதுகை அறியக்கூடாது. சீஷர்களை உருவாக்கும் ஊழியர் தனது சீஷர்களிடம் ஏழைகளுக்குக் கொடுத்துதவும்படி [அவர்களுக்கு வசதி இருக்கு

மானால்) என்றும், தான் எதைப் போதிக்கிறோமோ அது அமைதியாகச் செயல்படுத்த வேண்டும் என்றும் போதிக்கிறார்.

### சரியான காரணங்களுக்காக ஜெபித்தலும் உபவாசித்தலும்

தம்மைப் பின்பற்றுகிறவர்கள் உபவாசித்து ஜெபிக்க வேண்டும் என்றும், இதை மனிதர்கள் காணாதபடி செய்து தேவனுக்குப் பிரியமாக நடக்க வேண்டும் என்றும் இயேசுவானவர் எதிர்பார்க்கிறார். இல்லாவிட்டால் அவர்கள் நரகத்துக்குச் செல்லும் வேதபாரகர் பரிசேயரைவிட வேறுபட்டவர்களாக இருக்கமாட்டார்கள். இவர்கள் மக்களின் பாராட்டைப் பெறுவதற்காகவே, தாற்காலிகமான பலனைப் பெறுவதற்காகவே ஜெபித்தார்கள், உபவாசம் இருந்தார்கள். இயேசு தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கு எச்சரிப்புக் கொடுத்திருக்கிறார்:

> அன்றியும் நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம்பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்துதீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம்பண்ணும் போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.
>
> நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உபவாசிக்கும் போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார் (மத். 6:5–6, 16–18).

கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுபவர்களில் எத்தனைபேர் ஜெப வாழ்க்கை இல்லாமலும், ஒருபோதும் உபவாசிக்காமலும் இருக்கிறார்கள்?[41] இந்தக் காரியத்தில் இவையிரண்டையும் செய்யும்

[41] இந்தப் புத்தகத்தின் பின்பகுதியில் உபவாசத்தைக் குறித்து ஒரு முழு அத்தியாயம் எழுதப்பட்டிருக்கிறது.





(தவறான நோக்கத்துக்காகவாவது) வேதபாரகர் பரிசேயரின் நீதியைவிட இவர்களுடைய நீதி எவ்வளவு அதிகமாக இருக்கிறது?

### ஜெபத்தையும் மன்னிப்பையும் குறித்த ஒரு போதனை

ஜெபத்தைக் குறித்துக் குறிப்பிடும்போது, இயேசுவானவர் தமது சீஷர்கள் எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதற்குக் கூடுதலான விவரங்களைக் கூறியுள்ளார். பிதாவானவர் தம்மைக் குறித்து வெளிப்படுத்தியிருப்பதை நாம் நமது ஜெபத்தின்மூலமாக மறுப்பதின்மூலம் அவரை இழிவுபடுத்தாமல் நாம் கவனமாக ஜெபிக்க வேண்டுமென்று இயேசு விரும்புகிறார். எடுத்துக்காட்டாக, நாம் கேட்பதற்கு முன்பாகவே நமக்கு எது தேவை என்று பிதாவானவர் அறிந்திருக்கிறபடியால் (அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்) நாம் ஜெபிக்கும்போது, அர்த்தமில்லாமல் சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்க வேண்டியதில்லை:

> அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப் போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப் போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார் (மத். 6:7–8).

மெய்யாகவே நமது ஜெபங்கள் நாம் தேவனை எவ்வளவாக அறிந்திருக்கிறோம் என்பதை வெளிப்படுத்துகின்றன. தேவனுடைய வார்த்தையில் அவர் எப்படி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார் என்பதை அறிந்திருப்பவர்கள் *அவருடைய* சித்தம் செய்யப்பட வேண்டும் என்றும் *அவருடைய* நாமம் மகிமைப்பட வேண்டும் என்றும் ஜெபிக்கிறார்கள். அவருக்குப் பிரியமானவர்களாகப் பரிசுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதே அவர்களுடைய மேலான வாஞ்சையாகும். கர்த்தருடைய ஜெபம் என்று நாம் அழைக்கும் இயேசுவானவரின் மாதிரி ஜெபத்தில் இது பிரதிபலிக்கிறது. தமது சீஷர்கள் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்[42] என்பதை அது வெளிப்படுத்துகிறது.

> நீங்கள் ஜெபம்பண்ண வேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம்

[42] இந்த ஜெபம் ''இயேசுவின் நாமத்தில்'' ஏறெடுக்கப்படாதபடியால் இதை ஜெபிக்கக்கூடாது என்று சிலர் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட தர்க்கத்தை நாம் பின்பற்றுவோமானால், நடபடிகள் மற்றும் நிருபங்களில் கொடுக்கப்பட்டுள்ள அப்போஸ்தலர்களின் பல ஜெபங்களை ''கிறிஸ்தவ ஜெபங்கள்'' அல்ல என்றே சொல்ல வேண்டியிருக்கும்.

> வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும் [மத். 6:9–11].

தேவனுடைய நாமம் பரிசுத்தப்பட வேண்டும், அது மதிக்கப்பட வேண்டும், பரிசுத்தமாகக் கருதப்பட வேண்டும் என்பதே கிறிஸ்துவின் சீஷர்களுடைய முக்கியமான கரிசனையாக இருக்க வேண்டும்.

தேவனுடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என்று ஜெபிப்பவர்கள், தாங்களும் தேவனுடைய நாமம் பரிசுத்தப்படும்படி பரிசுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இது மாய்மாலமான காரியமாக இருக்கும். நம்மைப்போலவே மற்றவர்களும் தேவனுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்ற வாஞ்சையை இந்த ஜெபம் பிரதிபலிக்கிறது.

மாதிரி ஜெபத்தின் இரண்டாவது விண்ணப்பமும் இதைப் போன்றதேயாகும்: ‘‘உம்முடைய ராஜ்யம் வருவதாக.’’ ராஜ்யம் என்றால் அதை ஆளுகைசெய்யும் ஒரு ராஜாவும் இருக்க வேண்டும். கிறிஸ்தவ சீஷன் தன்னையும், முழு உலகத்தையும் ஆளுகைசெய்யும் ராஜாவைக் காண விரும்புகிறான். எல்லோரும் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தில் இராஜாவாகிய இயேசுவுக்கு முன்னால் முழங்கால்படியிடுவார்கள் என்றால் அது எவ்வளவு நலமாக இருக்கும்!

மூன்றாவது விண்ணப்பம் முதல் இரண்டு விண்ணப்பங்களையும் பிரதிபலிக்கிறது: ‘‘உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.’’ நமது சொந்த வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்துக்கு நம்மை ஒப்புக்கொடுக்காமல் இந்த ஜெபத்தை எப்படி உண்மையோடு ஏறெடுக்க முடியும்? தேவனுடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோலப் பூமியிலேயும் முழுமையாக, பரிபூரணமாகச் செய்யப்பட வேண்டும் என்று மெய்யான சீஷன் வாஞ்சிக்கிறான்.

இன்றைக்குரிய நமது ஆகாரத்தைவிட தேவனுடைய நாமம் பரிசுத்தப்படுவதும், அவருடைய சித்தம் செய்யப்படுவதும், அவருடைய ராஜ்யம் வருவதுமே நமக்கு முக்கியமான காரியங்களாக இருக்க வேண்டும். இந்த நான்காவது விண்ணப்பம் ஒரு காரணத்துக்காகவே அந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. இது முன்னுரிமையின் சரியான வரிசையைக் காட்டுகிறது, இதில் பேராசை காணப்படவில்லை. கிறிஸ்துவின் சீஷன் பணத்துக்கு அல்ல, தேவனுக்கே ஊழியம் செய்கிறான். உலகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதில் அவர்கள் கவனம் செலுத்தவில்லை.





இந்த நான்காவது விண்ணப்பம், நாம் இந்த ஜெபத்தை ஒவ்வொரு நாளும், குறிப்பாக காலை வேளையில் ஏறெடுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

### மாதிரி ஜெபம் தொடருகிறது

கிறிஸ்துவின் சீஷர்கள் எப்போதாவது பாவம் செய்கிறார்களா? கிறிஸ்து அவர்கள் தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறபடியால், அவர்கள் பாவம் செய்கிறார்கள் என்பது தெரிகிறது.

> எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே. மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் [மத். 6:12–15].

தங்களுடைய கீழ்ப்படியாமை தேவனுக்கு வேதனையை உண்டாக்குகிறது என்று இயேசுவின் சீஷர்கள் அறிந்திருக்கிறார்கள். அதற்காக அவர்கள் வெட்கப்படுகிறார்கள். அந்தக் கறையை அகற்ற அவர்கள் விரும்புகிறார்கள். அவர்களுடைய பரமபிதாவானவர் கிருபையாக அவர்களை மன்னிக்கக் காத்திருக்கிறார். ஆனால் அவர்கள் கர்த்தருடைய ஜெபத்தின் ஐந்தாவது விண்ணப்பத்தில் மாதிரியாகக் கொடுக்கப்பட்டுள்ளதுபோல அவர்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

ஆனால் அவர்கள் மன்னிக்கப்பட வேண்டுமானால், அவர்கள் மற்றவர்களை மன்னிக்க வேண்டும். அவர்கள் அதிகமாக மன்னிக்கப்பட்டிருக்கிறபடியால், அவர்கள் தங்களிடம் மன்னிப்புக்கேட்கும் எல்லோரையும் மன்னிக்க வேண்டும். அப்படிக் கேட்காதவர்களிடமும் கூட அன்போடு ஒப்புரவாகுதலை நாட வேண்டும். அவர்கள் மன்னிக்க மறுப்பார்களானால் தேவன் அவர்களை மன்னிக்க மாட்டார்.

ஆறாவதும், இறுதியானதுமான விண்ணப்பமும்கூடபரிசுத்தமாக இருக்க வேண்டும் என்ற சீஷனின் வாஞ்சையையே பிரதிபலிக்கிறது: ‘‘எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று [தீயவனிடமிருந்து] எங்களை இரட்சித்துக்கொள்ளும்.’’ மெய்யான சீஷன் பரிசுத்தத்துக்காக அதிகமாக வாஞ்சிக்கிறபடியால், தான் சோதிக்கப்படக்கூடிய சூழ்நிலைக்குத் தன்னைக் கொண்டுபோகமலிருக்

கும்படி வேண்டிக்கொள்ளுகிறான். மேலும் தன்னைக் கண்ணியில் மாட்டக்கூடிய எல்லாத் தீமையிலிருந்தும் தன்னைக் காப்பாற்றும்படி அவன் வேண்டிக்கொள்ளுகிறான். நாம் தீமையும் சோதனையும் நிறைந்த உலகத்துக்குள் பிரவேசிக்கிறபடியால் ஒவ்வொரு நாள் காலையிலும் இந்த ஜெபத்தை ஏறெடுப்பது நல்லதாகும். நாம் ஜெபிக்கும்படி தேவன் கொடுத்திருக்கும் இந்த ஜெபத்துக்கு அவர் கண்டிப்பாகப் பதிலளிப்பார்!

தேவனை அறிந்திருக்கிறவர்கள் ஏன் இந்த ஆறு விண்ணப்பங்களும் பொருத்தமாக இருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளுகிறார்கள். இதற்கான காரணம் ஜெபத்தின் கடைசி வரியில் வெளிப்படுத்தப்படுகிறது: ''ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே'' [மத். 6:13]. தேவன் தமது ராஜ்யத்தை ஆளுகை செய்யும் பெரிய ராஜாவாக இருக்கிறார், நாம் அவருடைய சேவகர்களாக இருக்கிறோம். அவர் சர்வவல்லவராக இருக்கிறபடியால் அவருடைய சித்தத்தை எவரும் எதிர்த்து நிற்க முடியாது. நித்தியமாக எல்லா மகிமையும் அவருக்கே உரியதாகும். அவர் கீழ்ப்படிவதற்குத் தகுதியானவர்.

கர்த்தருடைய ஜெபத்தின் முக்கியமான கருப்பொருள் என்ன? *பரிசுத்தம்*. தேவனுடைய நாமம் பரிசுத்தப்பட வேண்டும், அவருடைய ராஜ்யம் பூமியில் வர வேண்டும், அவருடைய சித்தம் எல்லா இடத்திலும் பரிபூரணமாகச் செய்யப்பட வேண்டும் என்று கிறிஸ்துவின் சீஷர்கள் வாஞ்சிக்கிறார்கள். இது அவர்களுடைய அன்றாட அப்பத்தைவிட அதிக முக்கியமானதாகும். அவருக்குப் பிரியமானவர்களாக இருக்க அவர்கள் விரும்புகிறார்கள், அதில் தவறினால், அவருடைய மன்னிப்பை வேண்டுகிறார்கள். மன்னிக்கப்பட்ட மக்களாக இருக்கும் அவர்கள் மற்றவர்களையும் மன்னிக்கிறார்கள். சோதனையைத் தவிர்க்கும் அளவுக்கு அவர்கள் முற்றிலும் பரிசுத்தமாக இருக்க விரும்புகிறார்கள். ஏனென்றால் சோதனை அவர்கள் பாவத்தில் விழக்கூடிய வாய்ப்பை அதிகரிக்கிறது. சீஷர்களை உருவாக்குபவர் இவைகளைத் தனது சீஷர்களுக்குப் போதிக்கிறார்.

### சீஷனும் அவனுடைய உடைமைகளும்

தாங்கள் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டாலும் வாழ்க்கையின் முக்கியமான நோக்கம் எப்போதுமே பொருட்களைச் சேர்த்துவைப்பதே என்ற எண்ணத்தில் அவர்கள் இருக்கிறபடியால் மலைப்பிரசங்கத்தில் அடுத்துச் சொல்லப்பட்டிருப்பது அவர்களைக் கலக்கமடையச் செய்கிறது.

> பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அதைக்





> கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்! இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது [மத். 6:19–24].

பூமியிலே நாம் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கக்கூடாது என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார். ''பொக்கிஷம்'' என்று குறிப்பிடப்படுவது எது? பெரும்பாலும் பொக்கிஷம் என்று அழைக்கப்படுபவை பொக்கிஷப் பெட்டியில் வைக்கப்பட்டு, பாதுகாப்பான இடத்தில் வைக்கப்படுகிறது. அது ஒருபோதும் செயல்பூர்வமாகப் பயன்படுத்தப்படுவதில்லை. பூச்சியும் துருவும் அதைக் கெடுக்கும், திருடர்களும் அதைத் திருடுவார்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறார். அதாவது, இவைகளை ''அத்தியாவசியமில்லாதவை'' என்று குறிப்பிடலாம். நாம் அடிக்கடி அணியும் ஆடைகளை அல்ல, அணியாமல் பின்பக்கமாக வைத்திருக்கும் ஆடைகளையே பூச்சிகள் அரிக்கின்றன. நாம் அபூர்வமாகப் பயன்படுத்துபவைகளிலேயே துருப்பிடிக்கிறது. திருடர்கள் பெரும்பாலும் மக்களுக்கு உண்மையில் தேவையில்லாதவைகளையே திருடுகிறார்கள்: கலைப்பொருள், நகை, விலைமதிப்புள்ள கருவிகள். அடகு வைக்கப்படக்கூடிய பொருட்கள் இவைகளையே திருடுகிறார்கள்.

மெய்யான சீஷர்கள் தங்களுக்கு உண்டானவைகளையெல்லாம் வெறுத்து விட்டுவிடுகிறார்கள் [பார்க்க, லூக்கா 14:3]. அவர்கள் தேவனுடைய பணத்துக்கு உக்கிராணிகளாக மட்டுமே இருக்கிறார்கள். எனவே பணத்தைச் செலவழிப்பதுகுறித்த ஒவ்வொரு தீர்மானமும் ஆவிக்குரிய தீர்மானமாகவே இருக்கிறது. நாம் பணத்தைக்கொண்டு எதைச் செய்கிறோமோ அது நமது வாழ்க்கையை ஆளுகைசெய்வது

யார் என்பதைப் பிரதிபலிக்கிறது. நாம் ‘‘பொக்கிஷங்களைச்’’ சேர்த்து, நமக்கு அத்தியாவசியமில்லாதவைகளை வாங்கப் பணத்தைச் செலவழிப்போமானால், இயேசுவானவர் நம்மைக் கட்டுப்படுத்தவில்லை என்று தெரிகிறது. ஏனென்றால், அவர் நம்மைக் கட்டுப்படுத்துவார் என்றால் அவர் நமது பொறுப்பில் கொடுத்துள்ள பணத்தைக் கொண்டு நாம் சிறப்பான காரியங்களைச் செய்வோம்.

இந்தச் சிறப்பான காரியங்கள் எவை? பரலோகத்தில் பொக்கிஷத்தைச் சேர்த்துவைக்கும்படி இயேசுவானவர் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார். இது எப்படி முடியும்? லூக்கா சுவிசேஷத்தில் இதை அவர் நமக்குச் சொல்லுகிறார்: ‘‘உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள், பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை’’ [லூக்கா 12:33].

ஏழைகளுக்கு உதவுவதற்காகவும், சுவிசேஷத்தைப் பரவச் செய்வதற்காகவும் பணத்தைக் கொடுத்துதவும்போது, நாம் பரலோகத்தில் பொக்கிஷத்தைச் சேர்த்துவைக்கிறோம். மதிப்பில்லாமல் குறைந்துபோகும் ஒன்றை எடுத்து, ஒருபோதும் மதிப்பில் குறைவுபடாத ஒன்றைச் செய்யும்படி இயேசுவானவர் நமக்குச் சொல்லுகிறார். இதைத்தான் சீஷர்களை உருவாக்கும் ஊழியர் செய்கிறார்; அவர் இதைத் தமது சீஷர்களுக்கும் போதிக்கிறார்.

## கெட்ட கண்

‘‘உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்’’ என்று இயேசுவானவர் சொல்லுவதின் அர்த்தம் என்ன? இதற்கு முன்பு அவர் பணத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறபடியால், இந்த வார்த்தைகளும் பணத்தைக் குறித்ததாக இருக்க வேண்டும்.

6:23 வசனத்தில் ‘‘கெட்ட’’ என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கிரேக்கச் சொல்லும் மத்தேயு 20:15 வசனத்தில் ‘‘வன்கண்’’ என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் சொல்லும் ஒரே சொல்லாகும். ஒரு எஜமான் தனது தொழிலாளியிடம் ‘‘நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன் கண்ணனாயிருக்கலாமோ’’ என்று சொல்லுவதாக நாம் பார்க்கிறோம். ஒரு கண் பொறாமைப்பட முடியாது என்பது தெளிவாகும். எனவே ‘‘வன்கண்ணன்’’ அல்லது கெட்ட கண்ணை உடையவன் என்ற சொல் பேராசை கொண்ட ஒருவனையே குறிக்கிறது. இது மத்தேயு 6:22–23 வசனங்களை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது. பணமே இந்த வசனத்தின் பின்னணியாகும்.





தெளிவான கண்ணைக் கொண்டவன் சத்தியத்தின் வெளிச்சம் தனக்குள் வருவதற்கு இடம் கொடுத்திருக்கிறான். இப்படியாக அவன் தேவனுக்கு ஊழியம் செய்து, பூமியில் அல்ல, பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேகரித்து வைக்கிறான். கெட்ட கண்ணைக் கொண்டவனோ சத்தியத்தின் வெளிச்சம் உள்ளே வராதபடி தடுத்து விடுகிறான். ஏனென்றால் தான் ஏற்கெனவே சத்தியத்தைப் பெற்றிருப்பதாக அவன் நினைத்துக்கொள்ளுகிறான். இதனால் அவன் இருளாயிருக்கிறான். பொய்களை நம்புகிறான். அவன் பூமியில் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறான். சுய தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளுவதே வாழ்க்கையின் நோக்கம் என்று அவன் நினைக்கிறான். பணமே அவனுக்குக் கடவுளாக இருக்கிறது. அவன் பரலோகத்தை நோக்கிச் செல்லுபவன் அல்ல.

பணத்தைக் கடவுளாக நினைப்பது என்றால் என்ன? அதாவது, உங்கள் வாழ்க்கையில் நியாயமாகத் தேவனுக்குச் சொந்தமான இடத்தைப் பணம் எடுத்துக்கொண்டிருக்கிறது. பணமே உங்கள் வாழ்க்கையை வழிநடத்துகிறது. அதற்காக உங்கள் பணத்தையும், சிந்தனையையும், நேரத்தையும் செலவழிக்கிறீர்கள். அதுவே உங்கள் சந்தோஷத்துக்கு முக்கிய ஆதாரமாக இருக்கிறது. நீங்கள் அதை நேசிக்கிறீர்கள்.[43] எனவேதான் பவுல் பண ஆசையை விக்கிரகாராதனைக்குச் சமமாகக் குறிப்பிட்டிருக்கிறார். பண ஆசையுள்ள எவனும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டான் என்று அவர் சொல்லியிருக்கிறார் [பார்க்க, எபே. 5:5; கொலோ. 3:5–6].

தேவனும் பணமும் நமது வாழ்க்கைக்கு எஜமானாக இருக்க விரும்பும் வேளையில், நாம் இருவருக்கும் ஊழியம் செய்ய முடியாது என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார். மறுபடியுமாக அவர் தமது அடிப்படைக் கருப்பொருளைவிட்டு மாறவில்லை என்பதை நாம் காண்கிறோம் – *பரிசுத்தமுள்ளவர்கள் மட்டுமே தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.* பணத்தைத் தங்கள் கடவுளாகக் கொண்டிருக்கும் இருள் நிறைந்த மக்கள் பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கிறார்கள் என்றும் அவர்கள் ஜீவனுக்கு வழிநடத்தும் நெருக்கமான பாதையில் செல்லவில்லை என்றும் அவர் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

[43] மற்றொரு இடத்திலும் ஒருவனால் பணத்துக்கும் தேவனுக்கும் ஒரே வேளையில் ஊழியம்செய்ய முடியாது என்று இயேசுவானவர் வலியுறுத்தியிருக்கிறார்: ‘‘தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது என்றார். இவைகளையெல்லாம் பொருளாசைக்காரராகிய பரிசேயரும் கேட்டு, அவரைப் பரியாசம்பண்ணினார்கள்’’ [லூக்கா 16:13,14].

### ஆசைப்படும் எளியவர்கள்

அநாவசியமான காரியங்களைச் சேர்த்து வைப்பது மட்டும் தவறானது அல்ல. அடிப்டைத் தேவைகளாக இருக்கும் பொருட்களுக்காகக் கவலைப்படுவதும் தவறான காரியமாகும்.

> ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்பவிசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளைத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும் [மத். 6:25–34].





இயேசுவானவர் யாருக்காக இந்த வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறாரோ அவர்களோடு தங்களை ஒன்றாக இணைத்துப் பார்ப்பது இந்த நூலை வாசிப்பவர்களில் பலருக்குக் கடினமாக இருக்கும். நீங்கள் எப்போது உணவுக்காகவும், குடிப்பதற்காகவும், ஆடைக்காகவும் கவலைப்பட்டிருக்கிறீர்கள்?

என்றாலும், இயேசுவானவரின் வார்த்தைகள் நிச்சயமாக நமக்குப் பொருத்தமாக இருக்கின்றன. வாழ்க்கையில் *அத்தியாவசியமானவைகளைக்* குறித்துக் கவலைப்படுவதே தவறாக இருக்குமானால், *அநாவசியமானவைகளைக்* குறித்துக் கவலைப்படுவது எவ்வளவு பெரிய தவறாக இருக்கும்? தமது சீஷர்கள் அடிப்படையில் இரண்டு காரியங்களையே தேட வேண்டுமென்று இயேசுவானவர் விரும்பினார்: அவருடைய ராஜ்யம், அவருடைய நீதி. கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்ளும் ஒருவரால் தசமபாகத்தைக் கொடுக்க முடியாதிருக்கும் போது [இது பழைய உடன்படிக்கையின் கட்டளை என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும்], அவரால் பல அத்தியாவசியமில்லாத பொருட்களை வாங்க *முடியும்* என்றால், அவர் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய தகுதிநிலையையும் தேட வேண்டும் என்ற இயேசுவின் தகுதிநிலைக்கு ஏற்ப வாழுகிறாரா? இல்லை என்பதே தெளிவான பதிலாகும்.

### குற்றம் கண்டுபிடிக்கிறவராக இராதேயுங்கள்

இயேசுவானவர் அடுத்து நியாயந்தீர்த்தல் மற்றும் குற்றம் கண்டுபிடித்தல் ஆகிய பாவங்களைக்குறித்துத் தமது சீஷர்களை எச்சரிக்கிறார்.

> நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள், நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப் போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பின்பு உன் சகோதரன்

கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகை பார்ப்பாய் (மத். 7:1–5).

இயேசுவானவர் இந்தப் பகுதியில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வேதபாரகரையோ அல்லது பரிசேயரையோ குற்றம் சாட்டாவிட்டாலும், அவர்களும் இதே பாவத்தைச் செய்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் அவரைக் குற்றம்சாட்டினார்கள்!

மற்றவர்களை நியாயந்தீர்க்கக்கூடாது என்று இயேசுவானவர் எச்சரித்ததின் சரியான அர்த்தம் என்ன?

முதலில் எது அர்த்தம் அல்ல என்பதைப் பார்ப்போம். மக்களின் செயல்களைக் கவனிப்பதின் மூலம் அவர்களுடைய குணாதிசயத்தைக் குறித்து அடிப்படையான தீர்மானங்களை எடுக்கக்கூடாது என்று அவர் சொல்லவில்லை. இது தெளிவாக இருக்கிறது. இந்தப் பகுதிக்குப் பிறகு இயேசுவானவர் தமது சீஷர்களிடம் பன்றிகளிடம் முத்தைப்போடக் கூடாது என்றும், நாய்களுக்கு முன்பாக பரிசுத்தமானதைப் போடக் கூடாது என்றும் சொல்லியிருக்கிறார் (பார்க்க, 7:6). அவர் சிலவகைப்பட்ட மக்களையே சொல்லணியில் பன்றிகள், நாய்கள் என்று குறிப்பிடுகிறார். இவர்கள் தங்களிடம் கொடுக்கப்படும் முத்தின் – பரிசுத்தமான காரியங்களின் மதிப்பை அறிவதில்லை. இவர்கள் நிச்சயமாக இரட்சிக்கப்படாத மக்களாகவே இருக்க வேண்டும். நாம் இந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டுமானால், யார் பன்றிகள், யார் நாய்கள் என்பதை அறிய வேண்டும்.

மேலும், இயேசு விரைவிலேயே கள்ளப் போதகர்களை எப்படிப் பகுத்தறிவது என்று சொல்லியிருக்கிறார். அவர்களுடைய கனிகளைக் கொண்டு அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்திய ஓநாய்கள் என்பதை அறிய முடியும் (பார்க்க, 7:15). இயேசுவானவரின் போதனைகளுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டுமானால், மக்களின் வாழ்க்கை முறைகளைக் கவனித்து, பகுத்தறிய வேண்டியிருக்கிறது.

இதைப்போலவே பவுல் கொரிந்திய விசுவாசிகளிடம் இப்படிச் சொல்லியிருக்கிறார்:

> நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்கார னாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகா ராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறிய னாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக் கூடாது; அப்படிப்பட்ட வனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது (1 கொரி. 5:11).

இந்தப் போதனையின்மூலம் நாம் நடக்க வேண்டுமானால் மக்களின் வாழ்க்கை முறைகளைக் கவனித்து நாம் கவனித்தவை





களின் அடிப்படையில் அவர்களில் யார் குற்றவாளிகள் என்று தீர்த்து அவர்களைவிட்டு விலக வேண்டியிருக்கிறது.

யார் தேவனுக்குரியவர்கள் யார் பிசாசுக்குரியவர்கள் என்பதை நாம் எளிதாகப் பகுத்தறிய முடியும் என்று அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லியிருக்கிறார். மக்களின் வாழ்க்கை முறைகளைப் பார்க்கும் போது, யார் இரட்சிக்கப்பட்டவர்கள், யார் இரட்சிக்கப்படாதவர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது (பார்க்க, 1 யோவான் 3:10).

இதனால், மக்களின் செயல்களின் மூலம் அவர்களுடைய குணாதிசயத்தைக் கண்டறிந்து, அவர்கள் தேவனுக்குச் சொந்தமான வர்களா அல்லது பிசாசுக்குச் சொந்தமானவர்களா என்று நிதானித்து அறிவதற்கு விரோதமாக இயேசுவானவர் எச்சரிக்கவில்லை என்பது தெரிகிறது. அப்படியானால் இயேசுவானவர் சொன்னதின் அர்த்தம் என்ன?

*சகோதரனிடம்* (இயேசுவானவர் இந்தப் பகுதியில் மூன்று முறை சகோதரன் என்று குறிப்பிடுவதைக் கவனியுங்கள்) *துரும்பு* போன்ற சிறிய குற்றங்களைக் கண்டுபிடிப்பதைப் பற்றியே இயேசுவானவர் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். மக்களின் மிக மோசமான தவறுகளைக் கண்டு அவர்கள் அவிசுவாசிகள் என்று தீர்க்கிறதற்கு எதிராக இயேசு எச்சரிக்கவில்லை என்பது நிச்சயம். ஏனென்றால், விரைவிலேயே இந்தப் பிரசங்கத்தில் அவர் அப்படிச் செய்யும்படி சொல்லுகிறார். இவை ஒரு கிறிஸ்தவன் மற்றொரு கிறிஸ்தவனை எப்படி நடத்த வேண்டும் என்பதுகுறித்த போதனைகளாகும். தங்களுடைய பெரிய தவறுகளை உணராமல் மற்றக் கிறிஸ்தவர்களிடம் சிறிய தவறுகளைக் கண்டு பிடித்துக்கொண்டிருக்கக் கூடாது என்றுதான் இயேசுவானவர் எச்சரிக்கிறார். இப்படிப்பட்ட வேளைகளில் நாம் மாய்மாலக்காரர்களாக நடந்துகொள்ளுகிறோம். இயேசுவானவர் ஒருமுறை இப்படி மாய்மாலத் தனமாக நியாயந்தீர்த்தவர்களிடம் இவ்வாறு சொல்லியிருக்கிறார்: ‘‘உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக் கடவன்’’ (யோவான் 8:17).

பல இடங்களில் மலைப்பிரசங்கத்துக்கு இணையாக இருக்கும் தனது நிருபத்தை எழுதிய யாக்கோபு ஓரிடத்தில் இப்படிக் குறிப்பிட் டிருக்கிறார்: ‘‘சகோதரரே, நீங்கள் நியாயந்தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்’’ (யாக். 5:9). இயேசுவானவர் எதைக் குறித்து எச்சரிக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள இதுவும் நமக்கு உதவுகிறது. சக விசுவாசிகளிடம் குற்றம் கண்டுபிடித்து, பிறகு ஒருவர் மற்றவர்மீது குற்றம் சாட்டும் விதமாக அதை அறிவிப்பதற்கு விரோதமாகவே அவர் எச்சரித்திருக்கிறார். சபையில் இது மிகவும் அதிகமாகக் காணப்படும் பாவமாகும். இதில் குற்றம்செய்கிறவர்கள்

நியாயத்தீர்ப்பை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. நாம் சக விசுவாசியின் குறைகளை மற்றவர்களுக்குச் சுட்டிக்காட்டி அவருக்கு விரோதமாகப் பேசும்போது, நாம் பொன்னான விதியை மீறுகிறோம். ஏனென்றால் நாம் இல்லாத வேளையில் நமக்கு விரோதமாக யாரும் பேசக்கூடாது என்றே நாம் நினைக்கிறோம்.

நமது சகோதரனின் தவறைக் குறித்து, மாய்மாலமில்லாத வகையில், அதே குற்றத்தை நாமும் செய்திருக்கவில்லை என்பதை நிச்சயப்படுத்திக்கொண்டு, அன்போடு அவரை அணுக வேண்டும். என்றாலும், அவிசுவாசிகளிடம் இப்படிச் செய்வது முற்றிலும் நேரத்தை வீணாக்குவதாகும். அவர்களைக் குறித்து இயேசு இப்படிச் சொல்லுகிறார்:

> பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துக்களைப் பன்றிகள்முன் போடாதேயுங் கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும் [மத். 7:6].

இதைப்போலவே, நீதிமொழிகளின் நூலில் ''பரியாசக்காரனைக் கடிந்துகொள்ளாதே, அவன் உன்னைப் பகைப்பான்; ஞானமுள்ள வனைக் கடிந்துகொள், அவன் உன்னை நேசிப்பான்'' என்று சொல்லப் பட்டிருக்கிறது [நீதி. 9:8]. இயேசுவானவர் மற்றொரு இடத்தில் சுவிசேஷத்தைப் புறக்கணிப்பவர்களுக்கு விரோதமாகத் தமது சீஷர்கள் தங்கள் கால் தூசியை உதறிவிட்டு வர வேண்டும் என்று சொல்லியிருக் கிறார். சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுவதில் ஆர்வம் காட்டாததைக் கொண்டு ''நாய்களை'' நாம் இனங்கண்டுகொள்ளும்போது, மற்றவர் களுக்கு நாம் இன்னும் கேட்பதற்கு வாய்ப்புக்கொடுக்காத வேளையில் இவர்களிடம் அனாவசியமாக நாம் நமது நேரத்தை வீணாக்கக்கூடாது என்றே தேவன் விரும்புகிறார்.

## ஜெபிக்கும்படி ஊக்குவித்தல்

இறுதியாக இயேசுவானவருடைய பிரசங்கத்தின் இறுதிப் பகுதிக்கு நாம் வருகிறோம். அது ஊக்கமளிக்கும் ஜெபம் குறித்த வாக்குத்தத்தங் களோடு துவங்குகிறது.

> கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப் படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளு கிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிற வனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷ





> னானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? [மத். 7:7–11].

''ஆகா, மலைப்பிரசங்கத்தில் இந்தப் பகுதி பரிசுத்தத்தைக் குறித்ததாக இருக்கவில்லையே!'' என்று ஏதேனும் ஒரு வாசகர் வியப்பாகக் கூறலாம்.

இது நாம் எதற்காக ஜெபத்தில் கேட்கிறோம், தேடுகிறோம், தட்டுகிறோம் என்பதைப் பொருத்ததாகும். ''நீதியின்மேல் பசிதாக முள்ளவர்களாக'' இருக்கும் நாம் இயேசுவானவர் இந்தப் பிரசங்கத்தில் கட்டளையிட்டுள்ள எல்லாவற்றுக்கும் கீழ்ப்படிய விரும்புகிறோம். இந்த வாஞ்சை நிச்சயமாக நமது ஜெபங்களில் பிரதிபலிக்கிறது. உண்மையில் இயேசுவானவர் இந்தப் பிரசங்கத்தில் நம்மோடு பகிர்ந்துகொள்ளும் மாதிரி ஜெபம் தேவனுடைய சித்தம் செய்யப்பட வேண்டும் என்பதற் காகவும், பரிசுத்தத்துக்காகவும் ஏறெடுக்கப்படும் ஜெபமாகும்.

மேலும், லூக்கா ஜெபிப்பதைக் குறித்த இந்த வார்த்தைகளைக் குறிப்பிடும்போது அது இந்த வார்த்தைகளோடு முடிவடைகிறது: ''பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் *பரிசுத்த ஆவியைக்* கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா '' [லூக்கா 11:13]. ''நல்ல ஈவுகளை'' நமக்கு வாக்குத்தத்தமாக இயேசுவானவர் அறிவித்தபோது அவர் டாம்பீகமான பொருட்களைக் குறிப்பிடவில்லை. அவருடைய கருத்தில் பரிசுத்த ஆவியானவரே ''நல்ல ஈவாக'' இருக்கிறார். ஏனென்றால் பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பரிசுத்தமாக்குகிறார், மற்றவர்களைப் பரிசுத்தமாக்கும் சுவிசேஷத்தைப் பரவச் செய்ய நமக்கு உதவுகிறார். பரிசுத்தமுள்ள மக்கள் பரலோகத்துக்குச் செல்லுகிறார்கள்.

இதுதவிர தேவனுடைய சித்தத்துக்கு உட்பட்ட மற்றவைகளும் நல்ல ஈவுகளாக இருக்கின்றன. தேவன் தமது சித்தத்தையும், ராஜ்யத் தையும் குறித்தே அதிகக் கரிசனை கொண்டிருக்கிறார். எனவே, தேவனுடைய ராஜ்யத்தில் நாம் பயன்படுத்தப்படுவதை அதிகரிக்கச் செய்யும் எதற்காகவாவது நாம் ஜெபிப்போமானால் அவை நிச்சயமாகப் பதிலளிக்கப்படும்.

### சுருக்கிக் கூறும் ஒரு வாசகம்

இப்போது இதுவரை இயேசுவானவர் கூறிய எல்லாவற்றையும் சுருக்கிக் கூறும் ஒரு வசனத்துக்கு நாம் வந்திருக்கிறோம். பல விரிவுரை நூல்களில் இதைக் குறித்துக் கூறப்படவில்லை. *ஆதலால்* என்ற வார்த்தையோடு இந்த வசனம் துவங்குகிறபடியால் இது சுருக்க வசனமாக இருக்கிறது. எனவே இது முன்னால் கொடுக்கப்பட்டுள்ள போதனைகளோடு பிணைக்கப்பட்டுள்ளது. இயேசுவானவர் கூறியுள்ளவைகளில் எவ்வளவு காரியங்களை இது தொகுத்துக் கூறுகிறது? நாம் வசனத்தை வாசித்து, சிந்திப்போம்:

> ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம் [மத். 7:12].

இந்த வாசகம் ஜெபத்தைக் குறித்துச் சற்று முன்னால் கூறப்பட்ட வசனங்களின் சுருக்கமாக இருக்க முடியாது.

இயேசுவானவர் தமது பிரசங்கத்தின் துவக்கத்தில் தான் *நியாயப் பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும்* அழிப்பதற்கு வரவில்லை என்று கூறியதை நினைவுகூருங்கள் [பார்க்க, மத். 5:17]. அந்த இடத்திலிருந்து இப்போது நாம் பார்த்த வசனம் வரையில் தேவனுடைய பழைய ஏற்பாட்டுக் கட்டளைகளுக்கு ஆதரவாக அவைகளுக்கு விளக்கம் கொடுத்திருப்பதை நாம் பார்க்கிறோம். இப்படியாக இப்போது அவர் தாம் கட்டளையிட்ட *எல்லாவற்றையும்*, நாம் நியாயப்பிரமாணம் தீர்க்கதரிசனங்களிலிருந்து எடுத்துக் கூறிய எல்லாவற்றையும் தொகுத்துக் கூறுகிறார்: ‘‘ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே *நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்*’’ [மத். 7:12]. ‘‘நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்’’ என்ற சொற்றொடர் மத்தேயு 5:17 மற்றும் 7:12 வசனத்துக்கு இடையேயுள்ள எல்லாவற்றையும் இணைக்கிறது.

இப்போது தமது பிரசங்கத்தின் முடிவில் இயேசுவானவர் தமது கருப்பொருளை மறுபடியும் உறுதிப்படுத்துகிறார் – *பரிசுத்தமுள்ளவர்கள் மட்டுமே தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பார்கள்.*

> இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் [மத். 7:13–14].





ஜீவனுக்குப் போகிற இடுக்கமான வாசல் இரட்சிப்புக்கு அடையாளமாக இருக்கிறது. விரிவான வாசலும், விசாலமான வழியும் அழிவுக்கு வழிநடத்துகிறது. பெரும்பாலானவர்கள் செல்லும் இது அழிவுக்கு அடையாளமாக இருக்கிறது. இயேசுவானவர் இதற்கு முன் சொல்லியிருப்பவைகளின் தர்க்கரீதியான வளர்ச்சியாக, அவர் கூறியவைகளின் அர்த்தம் இடுக்கமான வழியில் செல்லுவதே இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து அவரைப் பின்பற்றுவதற்கான வழியாகும். விசாலமான வழி இதற்கு எதிரானதாக இருக்கிறது. கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுபவர்களில் எத்தனை பேர் இந்தப் பிரசங்கத்தில் சொல்லப்பட்டுள்ள நெருக்கமான வழியில் நடக்கிறார்கள்? சீஷர்களை உருவாக்கும் ஊழியர் நிச்சயமாக நெருக்கமான வழியில் நடந்துசெல்லுகிறார், தமது சீஷர்களையும் அப்படியே செல்லுமாறு வழிநடத்துகிறார்.

இயேசுவானவர் இரட்சிப்பைக் குறித்தும் பேரழிவைக் குறித்தும் அதிகமாகச் சொல்லியிருக்கும் இந்தப் பிரசங்கத்தில் விசுவாசத்தைக் குறித்தோ அல்லது தம்மில் விசுவாசம் வைப்பதைக் குறித்தோ எதுவும் சொல்லாதிருப்பது சில கிறிஸ்தவர்களுக்குப் புதிராக இருக்கிறது. ஆனால் நம்பிக்கைக்கும் நடத்தைக்கும் இடையேயுள்ள பிரிக்க முடியாத பிணைப்பைப் புரிந்துகொண்டிருப்பவர்களுக்கு இது ஒரு பிரச்சினையாக இருக்காது. இயேசுவுக்குக் கீழ்ப்படியும் மக்கள் தங்கள் கிரியைகளின் மூலமாக தங்கள் விசுவாசத்தைக் காட்டுகிறார்கள். அவருக்குக் கீழ்ப்படியாதவர்கள் அவர் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கவில்லை. இரட்சிப்பானது நம்மிடம் காட்டப்படும் தேவனுடைய கிருபையையைச் சுட்டிக்காட்டுவதுபோல, நமது வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் மாற்றமும் அதைச் சுட்டிக்காட்டுகிறது. நம்முடைய பரிசுத்தம் உண்மையில் அவருடைய பரிசுத்தமாகும்.

### பொய்யான சமயத்தலைவர்களைக் கண்டுகொள்ளுவது எப்படி

இயேசுவானவர் தொடர்ந்து தனது முடிவான வார்த்தைகளைச் சொல்லியபோது, அவர் அழிவுக்குச் செல்லும் விசாலமான வழியில் வழிநடத்திச் செல்லும் கள்ளத் தீர்க்கதரிசிகளைக் குறித்து எச்சரிக்கிறார். இவர்கள் தேவனுக்குரியவர்கள்போல வேஷமணிந்திருக்கிறார்கள். எல்லாக் கள்ளப்போதகர்களும், தலைவர்களும் இப்படித்தான் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டுகொள்ளுவது எப்படி?

> கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே

அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப் பழங்களையும் முட்பூண்டுகளில் அத்திப் பழங்களையும் பறிக்கிறார்களா? அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனி களைக் கொடுக்க மாட்டாது; கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்க மாட்டாது. நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும். ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்ப தில்லை. அந்நாளில் பலர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசு களைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் (மத். 7:15–23).

கள்ளப் போதகர்கள் வஞ்சிக்கிறவர்களாக இருக்கிறார்கள் என்று இயேசுவானவர் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். அவர்கள் உண்மையானவர்கள்போல வெளியில் பாசாங்கு செய்கிறார்கள். அவர்கள் இயேசுவைத் தங்கள் ஆண்டவர் என்று அழைக்கலாம், தீர்க்கதரிசனம் சொல்லலாம், பிசாசுகளை விரட்டலாம், அற்புதங்களைச் செய்யலாம். ஆனால் ''ஆட்டுத்தோல்'' ''பட்சிக்கிற ஓநாய்களை'' மறைக்கிறது. இவர்கள் மெய்யான ஆடுகளாக இருக்கவில்லை. அவர்கள் உண்மையானவர்களா, பொய்யானவர்களா என்பதை எப்படி அறிய முடியும்? அவர்களுடைய ''கனிகளை'' ஆராய்ந்து பார்ப்பதின் மூலம் அவர்களுடைய உண்மையான குணாதிசயத்தைக் கண்டுபிடிக்க முடியும்.

இயேசுவானவர் எந்தக் கனிகளைக் குறிப்பிடுகிறார்? அவை அற்புதங்களின் கனி அல்ல. மாறாக, இயேசுவானவர் போதித்திருக்கும் எல்லாற்றுக்கும் கீழ்ப்படியும் கனியே அதுவாகும். மெய்யானவர்கள் பிதாவானவரின் சித்தத்தைச் செய்கிறார்கள். பொய்யானவர்கள் ''அக்கிரமங்களைச்'' செய்கிறார்கள் (7:23). எனவே அவர்களுடைய





வாழ்க்கையை இயேசுவானவர் போதித்திருப்பவைகளோடும், அவருடைய கட்டளைகளோடும் ஒப்பிட்டுப் பார்ப்பது நமது பொறுப்பாகும்.

இன்று சபையில் அதிகமான கள்ளப் போதகர்கள் காணப்படுகிறார்கள். கடைசிக் காலம் நெருங்கிவருகிறபடியால் இயேசுவும் பவுலும் நம்மை எச்சரித்திருக்கிறபடி, இதைக் கண்டு நாம் ஆச்சரியப்படக் கூடாது (பார்க்க, மத். 24:11; 2 தீமோ. 4:3–4). இன்றைய நாட்களில் பரிசுத்தமில்லாதவர்களும் பரலோகத்துக்குச் செல்லலாம் என்று போதிப்பவர்களே மிக மோசமான கள்ளத்தீர்க்கதரிசிகளாக இருக்கிறார்கள். கோடிக்கணக்கான மக்களின் நித்திய அழிவுக்கு அவர்கள் காரணமாக இருக்கிறார்கள். அவர்களைக் குறித்து ஜாண் வெஸ்லி இப்படி எழுதியிருக்கிறார்:

> தேவனுடைய ஸ்தானாபதிகளே பிசாசின் தூதுவர்களாக மாறுவது எவ்வளவு பயங்கரமான காரியம்! பரலோகத்துக்குச் செல்லும் வழியை மக்களுக்குப்போதிக்கும் பொறுப்பைப் பெற்றிருப்பவர்கள் உண்மையில் நரகத்துக்குச் செல்லும் வழியைப் போதிக்கிறார்கள்.... ''யார் இதைச் செய்கிறார்கள்?'' என்று கேட்டால் நான் இப்படிப் பதிலளிப்பேன்... அவர்கள் ஞானமுள்ளவர்களாகவும், மரியாதைக்குரியவர்களாகவும் தோன்றும் பல்லாயிரம் பேராக இருந்தாலும், அவர்கள் எந்தச் சபைப்பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், – பெருமையுள்ளவர்களும், பாதைமாறிச் செல்லுகிறவர்களும், ஆசைக்கு அடிமையானவர்களும், உலகத்தை நேசிப்பவர்களும், சிற்றின்பத்தை நாடுகிறவர்களும், அநீதியானவர்களும், தயவில்லாதவர்களும், உதாசினர்களும், பயனில்லாமல் வாழ்கிறவர்களும், நீதிக்காக எந்தப் பாடும் அனுபவிக்காதவர்களும் தாங்கள் பரலோகத்துக்குச் சென்றுகொண்டிருப்பதாக நினைக்கும்படி இவர்கள் ஊக்குவிப்பவர்களாக இருக்கிறபடியால் அவர்கள் மிக மோசமான கள்ளப்போதகர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தேவனுக்கும் மனிதருக்கும் துரோகிகளாக இருக்கிறார்கள்... அவர்கள் தொடர்ந்து இரவின் ராஜ்யத்தில் மக்களை இழுக்கிறார்கள். அவர்கள் தங்களால் அழிக்கப்பட்ட பரிதாபகரமான ஆத்துமாக்களைப் பின்பற்றும்போது நரகமே முன்வந்து அவர்களை ஏற்றுக்கொள்ளுகிறது!

இயேசுவானவர் மத்தேயு 7:15–23 வசனங்களில் எந்தக் கள்ளப் போதகர்களைக் குறித்து எச்சரிப்புக் கொடுக்கிறாரோ அந்தக்

கள்ளப்போதகர்களைக் குறித்தே ஜாண் வெஸ்லியும் எழுதியிருக்கிறார்.[44]

இன்று பல கள்ளப் போதகர்கள் போதிப்பதற்கு மாறாக, நல்ல கனிகொடாதவர்கள் நரகத்தில் தள்ளப்படுவார்கள் என்று இயேசுவானவர் தெளிவாகக் கூறியிருப்பதைக் கவனியுங்கள் [பார்க்க, 7:19]. மேலும் இது போதகர்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் மட்டுமே பொருத்தமானது அல்ல, எல்லோருக்கும் பொருத்தமானது. ‘‘பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை’’ என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார் [மத். 7:21]. தீர்க்கதரிசிகளுக்கு உண்மையானது எல்லோருக்கும் உண்மையானதாகும். இதுவே இயேசுவானவரின் முக்கிய கருப்பொருளாகும் – *பரிசுத்தமுள்ளவர்கள் மட்டுமே தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பார்கள்.* இயேசுவுக்குக் கீழ்ப்படியாத மக்கள் நரகத்துக்கே செல்லுவார்கள்.

ஒருவன் உள்ளுக்குள் எப்படியிருக்கிறானோ அதற்கும் வெளியில் காட்சியளிப்பதற்கும் இடையேயுள்ள தொடர்பை இயேசுவானவர் சுட்டிக் காட்டியிருப்பதைக் கவனியுங்கள். ‘‘நல்ல’’ மரம் நல்ல கனிகளைக் கொடுக்கும். ‘‘கெட்ட’’ மரம் நல்ல கனிகளைக் கொடுக்க *முடியாது.* ஒரு மனிதனின் உள்ளான இயல்பே வெளியில் நல்ல கனியாக வெளிப்படுகிறது. தேவன் தமது கிருபையினால், இயேசுவை விசுவாசிப்பவர்களின் இயல்பை மாற்றியிருக்கிறார். [45]

[44] ஜாண் வெஸ்லியின் பிரசங்கத் தொகுப்பான *The Works of John Wesley* என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

[45] மற்றவர்களின் பாவத்தைக்குறித்துச் சாக்குப்போக்குச் சொல்லும் மக்கள் ‘‘அவர்களுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்று நமக்குத் தெரியாது’’ என்று பொதுவாகச் சொல்லுகிறார்கள். இதற்கு முரண்பாடாக இயேசுவானவர் வெளியே காணப்படுவது உள்ளே இருப்பதைப் பிரதிபலிக்கிறது என்று சொல்லியிருக்கிறார். ‘‘இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்’’ என்று அவர் சொல்லியிருக்கிறார் [மத். 12:34]. ஒருவன் விரோதமான வார்த்தைகளைப் பேசும்போது, அவனுடைய இருதயத்தில் விரோதம் நிறைந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. மேலும் இயேசு ‘‘எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும்’’ என்றும் சொல்லியிருக்கிறார் [மாற்கு 7:21–22]. ஒருவன் விபசாரம் செய்யும்போது அவனுடைய இருதயத்தில் என்ன இருக்கிறது என்று நாம் அறிகிறோம்: விபசாரம்.





## இறுதியான எச்சரிப்பும் சுருக்கமும்

ஒரு இறுதியான எச்சரிப்பு மற்றும் தொகுத்துக் கூறும் எடுத்துக் காட்டின்மூலம் இயேசுவானவர் தமது பிரசங்கத்தை முடிக்கிறார். நீங்கள் எதிர்பார்க்கிறபடி அது அவருடைய கருப்பொருளை எடுத்துக் காட்டுகிறது – *பரிசுத்தமுள்ளவர்கள் மட்டுமே தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்திரித்துக்கொள்ளுவார்கள்.*

> ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது [மத். 7:24–27].

இயேசுவின் இறுதியான எடுத்துக்காட்டு சிலர் பயன்படுத்துகிறதுபோல ‘‘வாழ்க்கையில் வெற்றிக்கான’’ சூத்திரம் அல்ல. கடினமான வேளைகளிலும் தம்முடைய வாக்குத்தத்தங்களின்மீது நம்பிக்கைவைத்து, பொருளாதாரரீதியாக வளத்தைப்பெற முடியும் என்று இயேசு ஆலோசனை கூறவில்லை என்பதை இதன் பின்னணி காட்டுகிறது. இது இயேசுவானவர் மலைப்பிரசங்கத்தில் கூறியுள்ள எல்லாவற்றுக்கும் சுருக்கமாகும். அவர் சொல்லுகிறபடி செய்கிறவர்கள் ஞானமுள்ளவர்கள், அவர்கள் பிழைத்திருப்பார்கள். தேவ கோபாக்கினை விழும்போது அவர்கள் அதற்குப் பயப்பட வேண்டிய அவசியமில்லை. அவருக்குக் கீழ்ப்படியாதவர்கள் புத்தியில்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ‘‘நீதியுள்ள ஆக்கினையைப்’’ பெறுவார்கள் [2 தெச. 1:8].

## ஒரு எதிர்ப்புக்கு மறுமொழி

இயேசுவின் மலைப்பிரசங்கம் அவருடைய பலிமரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்கு முன்னால் வாழ்ந்தவர்களுக்கு மட்டுமே பொருத்தமாக இருக்குமா? அவர்கள் இயேசுவானவர் அவர்களுடைய பாவங்களுக்காக மரிப்பதற்கு முன்பு நியாயப்பிரமாணத்தின் கீழாக அல்லவா இருந்தார்கள்? அது அவர்களுடைய இரட்சிப்புக்குத்

தாற்காலிகமான வழிவகையாக அல்லவா இருந்தது? அவருடைய மரணத்துக்குப் பின்னர் நாம் கிருபையினால் இரட்சிக்கப்படுகிறபடியால் இந்தப் பிரசங்கத்தின் கருப்பொருள் மதிப்பை இழந்துபோகிறதல்லவா?

இந்தக் கொள்கை மிகவும் மோசமான கொள்கையாகும். எவரும் இதுவரை தனது கிரியைகளினால் இரட்சிக்கப்படவில்லை. பழைய உடன்படிக்கைக்கு முன்பும், அது இருந்தபோதும் இதுவே உண்மை யாகும். ரோமர் 4ஆம் அதிகாரத்தில் ஆபிரகாமும் (பழைய உடன்படிக் கைக்கு முன்பு), தாவீதும் (பழைய உடன்படிக்கையின் காலம்) கிரியை களினால் அல்ல தங்கள் விசுவாசத்தினாலேயே நீதிமான்களாக்கப்பட் டார்கள் என்று பவுல் சொல்லுகிறார்.

மேலும், இயேசுவின் பேச்சைக் கேட்ட எவரும் கிரியையினால் இரட்சிக்கப்பட்டிருக்க முடியாது; ஏனென்றால் அவர்கள் எல்லோரும் பாவம் செய்து, தேவ மகிமையற்றவர்களாக இருந்தார்கள் (ரோமர் 3:23). தேவனுடைய கிருபையினால் மட்டுமே அவர்களை இரட்சிக்க முடியும், விசுவாசத்தின் மூலமாகவே இந்தக் கிருபையைப் பெற முடியும்.

இன்று சபையிலுள்ள பலர் இயேசுவின் கட்டளைகள் நாம் குற்ற உணர்வைப் பெறுவதற்காக மட்டுமே உதவுகிறது என்று கருதுவது துரதிருஷ்டமான காரியமாகும். கிரியைகளினால் இரட்சிப்பைச் சம்பாதித்துக்கொள்ளுவது இயலாத காரியம் என்பதைக் காட்டவே அவை கொடுக்கப்பட்டுள்ளன என்று இவர்கள் சொல்லுகிறார்கள். இப்போது நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறபடியால் அவருடைய கட்டளைகளில் பெரும்பாலானவைகளைப் புறக்கணிக்க முடியும், மற்றவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்பும்போது மட்டும் இதில் ஒரு கட்டளையை எடுத்துச் சொல்லி அவர்கள் எவ்வளவு பாவகரமானவர்களாக இருக்கிறார்கள் என்பதை உணரும்படி செய்து, அவர்கள் கிரியைகள் இல்லாத ‘‘விசுவாசத்தினால்’’ இரட்சிக்கப்பட முடியும் என்று சொல்லலாம் என்று இவர்கள் வாதிடுகிறார்கள்.

இயேசுவானவர் தமது சீஷர்களிடம் ‘‘உலகமெங்கும் சென்று சீஷர்களை உருவாக்கி, அவர்கள் குற்ற உணர்வைப் பெற்று, விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்ட பிறகு, எனது கட்டளைகள் அவர்களுடைய வாழ்க்கைக்கான நோக்கத்தை நிறைவேற்றிவிட்டன என்பதை அவர்கள் உணரும்படி செய்’’ என்று சொல்லவில்லை. மாறாக, அவர் ‘‘ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி... *நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்’’* என்று சொல்லியிருக்கிறார் (மத். 28:19–20 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது). சீஷர்களை உருவாக்கிவரும் ஊழியர்கள் இதைத்தான் செய்து வருகிறார்கள்.